தின பூமி
thinaboomi.com
பூமி: 32 சுற்று : 27 மார்கழி 21
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, திங்கள், ஜனவரி 05, 2026
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**சர்வாதிகாரிகளை கையாள முடிந்தால்.. புதினை சிறைப்பிடிக்க அமெரிக்காவுக்கு உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி சூசகம்..?**

....2-ம் பக்கம்

**விபி ஜி ராம்ஜி- சட்டத்திற்கு எதிராக தெலுங்கானா சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றம்**

...3-ம் பக்கம்

**டி-20 உலகக் கோப்பை: இந்தியாவில் விளையாட வங்காளதேச அணி மறுப்பு**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் எம்.சரவணன் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், என்.ராம், ரஜினிகாந்த், கமல்ஹாசன் எம்.பி, கவிஞர் வைரமுத்து, நல்லி குப்புசாமி, இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி.குகநாதன், ஏ.வி.எம். குடும்பத்தைச்சார்ந்த எம்.பாலசுப்ரமணியம், எம்.எஸ். குகன், அருணா குகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழகத்தில் 2.23 கோடி குடும்ப அட்டை தாரர்களுக்கு

# பொங்கல் பரிசு தொகுப்புடன் 3 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜன. 05-

**பொங்கல் பண்டிகையையொட்டி 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசாக ரூ.3000 வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.**

**பாரம்பரிய விழா...**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும் உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும் உலக மக்களுக்கு உணவளித்துப் பசிபிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படும் பாரம்பரிய உன்னத விழா பொங்கல் திருநாள் ஆகும்.

**பரிசு தொகுப்பு...**

பொங்கல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடிட தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கிட முதல்வர் ஏற்கனவே அறிவித்துள்ளார்கள். இதன்மூலம் 2,22,91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

**ரொக்கப் பரிசாக...**

மேலும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள வேட்டி, சேலைகள் அனைத்தும் எல்லா மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பொங்கல் விழாவை மேலும் சிறப்பாக கொண்டாடிட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் பொங்கல் ரொக்கப் பரிசாக ரூ.3,000/- வழங்கிட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

**வேட்டி, சேலைகள்...**

பொங்கல் பரிசுத் தொகுப்பு மற்றும் ரொக்கப் பரிசு மொத்தம் ரூ.6936,17,47,959/- செலவில் வழங்கப்படும். பொங்கல் திருநாளுக்கு முன்பாக ரொக்கப் பரிசும், பொங்கல் பரிசுத் தொகுப்பும், வேட்டி சேலைகளும் அனைத்து நியாயவிலைக் கடைகள் வழியாக வழங்கிட அனைத்து ஏற்பாடுகளும் செய்ய முதல்வர் உத்தரவிட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு முழுவதும் வீடு வீடாக சென்று

# பொங்கல் பரிசு டோக்கன்கள் விநியோகம் பணி தொடக்கம்

சென்னை, ஜன. 05-

**தமிழ்நாடு முழுவதும் வீடு வீடாக சென்று பொங்கல் பரிசு டோக்கன்கள் விநியோகம் பணி நேற்று முதல் தொடங்கியுள்ளது.**

பொங்கல் பண்டிகைக்கு இந்த ஆண்டு ரேஷன் கடைகளில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு வழங்கப்படும் என்று ஏற்கனவே தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கான பொருட்களை கொள்முதல் செய்வதற்காக ரூ.248 கோடி நிதியையும் ஒதுக்கியுள்ளது. இந்த நிலையில், சட்டசபை தேர்தலை முன்னிட்டு வரும் பொங்கல் பண்டிகை இது என்பதால், ரொக்க பணமும் வழங்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு பொதுமக்கள் மத்தியில் இருந்தது. அதை நிறைவேற்றும் வகையில், முதல்வர் மு.க. ஸ்டாலினும் அதற்கான அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.

அதன்படி, 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புடன் வேட்டி, சேலை வழங்கப்பட இருக்கிறது. மேலும் ரூ.3 ஆயிரம் ரொக்க பணமும் வழங்கப்பட இருக்கிறது. இதற்காக ரூ.6936 கோடியே 17 லட்சத்து 47 ஆயிரத்து 959 நிதி ஒதுக்கப்பட இருக்கிறது. அதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்பட இருக்கிறது.

வரும் 8ம் தேதி பொங்கல் பரிசு தொகுப்புடன் வேட்டி, சேலை மற்றும் ரூ.3,000 ரொக்க பரிசு வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்க இருக்கிறார். அன்றைய தினம் முதல், வரும் 14ம் தேதி வரை ரேஷன் கடைகளில் ஒவ்வொரு நாளும் சுமார் 400 ரேஷன் கார்டுகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட இருக்கிறது.

இந்தநிலையில், ரூ.3,000 ரொக்கம், பச்சரிசி, சர்க்கரை, கரும்புடன் கூடிய பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன் விநியோகம் தமிழகம் முழுவதும் நேற்று முதல் தொடங்கி உள்ளது. ரேஷன் கடை ஊழியர்கள் வீடு வீடாக சென்று டோக்கன் விநியோகம் செய்து வருகிறார்கள்.

# அ.தி.மு.க. வேட்பாளர் நேர்காணல் ஒத்திவைப்பு

சென்னை, ஜன. 05-

**வரும் 11, 12 தேதிகளில் நடைபெற இருந்த வேட்பாளர் நேர்காணல் ஒத்திவைக்கப்படுவதாக அ.தி.மு.க. தலைமை அறிவித்துள்ளது.**



சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட வாய்ப்பு கோரி விருப்ப மனு அளித்தவரகளுக்கான நேர்காணல் தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 11, 12ம் தேதிகளில் நடைபெற இருந்த அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கான நேர்காணல் ஜனவரி 12, 24 ஆகிய தேதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2026 சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு அளித்தவர்களுடனான நேர்காணல் வரும் 9ம் தேதி தொடங்கப்படுகிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள எம்ஜிஆர் மாளிகையில் ஜனவரி 9ம் தேதி முதல் 24ம் தேதி வரை நேர்காணல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

### 'உலகம் உங்கள் கையில்' என்ற பெயரில்

# 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடக்கி வைக்கிறார்

சென்னை, ஜன. 05-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மைய வளாகத்தில் இன்று (ஜன. 5) மாலை 3 மணியளவில் கல்லூரி மாணவர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில் துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த கல்லூரி மாணவர்களுக்கு 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் `உலகம் உங்கள் கையில்' என்னும் திட்டத்தை தொடக்கி வைக்கிறார்.**

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது., முதல்வர் மு.க.ஸ்டாலினின் அரசு, மாணவர்களின் நலன் மற்றும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்ப்புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதல் தலைமுறை பட்டமளிப்பு திட்டம், போஸ்ட்மெட்ரிக்உதவித்தொகைத் திட்டம், சமூக நீதி விடுதிகள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, மாணவர்கள் நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப டிஜிட்டல் திறன் பெற "உலகம் உங்கள் கையில்" என்னும் அறிவூட்டும் கருப்பொருளின் கீழ் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்க்கு 20 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என முதல்வர் அறிவித்தார்.

அந்த அறிவிப்பின்படி, இத்திட்டம் மாநிலம் முழுவதும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படுகிறது. முதல் கட்டமாக 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின் தொடக்க விழா முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையிலும் இன்று மாலை 3 மணியளவில் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மைய வளாகத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அரசு பொறியியல், கலை மற்றும் அறிவியல், மருத்துவம், விவசாயம், சட்டம், பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழில்துறைப் பயிற்சி போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த மாணவர்களுக்கும் 10 லட்சம் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.

"கல்வி அனைவருக்கும்! உயர்வு ஒவ்வொருவருக்கும்!" என்ற நோக்கத்துடன் தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த டெல், ஏசர், ஹெச்.பி. போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த மடிக்கணினிகளில் இன்டெல் ஐ3/ ஏ.எம்.டி. ரெஜென் 3 ப்ராஸசர், 8 ஜி.பி. ரேம், 256 எஸ்.எஸ்.டி. நினைவகம், விண்டோஸ் 11 ஹோம் ஸ்டிராடிஜிக் மற்றும் பாஸ் லினெக்ஸ் ஓ.எஸ். ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக எம்.எஸ். ஆபிஸ் 365 மேலும் "அறிவைத் தேடும் இளைய தலைமுறைக்குப் புதிய சாளரம்" என அமையும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான பெர்ப்லஸ்சிட்டி ப்ரோ-வின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாணவருக்கும் உயர்தர மடிக்கணினி பையும் வழங்கப்படுகிறது.

அரசு வழங்கும் விலையில்லா மடிக்கணினிகள், கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும், சமூக–பொருளாதார முன்னேற்றத்திற்கும் நேரடி ஆதாரமாக உதவுகின்றன. டிஜிட்டல் திறன் மேம்பாடு மூலம் மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறை, மென்பொருள் உருவாக்கம், தரவு உள்ளீடு, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வரைகலை வடிவமைப்பு, குறியிடுதல், வலை வடிவமைப்பு, செயற்கை நுண்ணறிவு கருவிகள், சுயாதீன வேலை போன்ற துறைகளில் "புதிய வாய்ப்புகளைப் பெறும் புதிய தலைமுறை" என்ற அளவில் தகுதியானவர்களாக மாணவர்களை மாற்றிட உதவுகிறது.

இதனால் குடும்ப வருமானம் உயர்ந்து, கிராம–நகர இடைவெளி குறைந்து, தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் முயற்சிகளும் உருவாகும் வாய்ப்பு அமையும். இத்திட்டம், "கல்வி மூலம் சமூக மேம்பாடு; தொழில்நுட்பம் மூலம் பொருளாதார முன்னேற்றம்" என்பதையும், "உலகம் உங்கள் கையில்" என்ற தமிழ்நாட்டின் மாபெரும் டிஜிட்டல் கனவையும் நனவாக்கும் வரலாற்றுப் பெருமைகள் சேர்க்கும் மாபெரும் கல்விப் புரட்சித் திட்டம் ஆகும்.

இவ்விழாவில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் சாதனை படைத்த மாணவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டு முழுவதும்

# வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க இதுவரை 7.40 லட்சம் பேர் விண்ணப்பம்

சென்னை, ஜன. 05-


**தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இதுவரை 7.40 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளதாக மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**

தமிழகத்தில் கடந்த நவ.4-ம் தேதி முதல் டிச.14-ம் தேதி வரை வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்.ஐ.ஆர்.) பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன்படி தமிழகத்தில் தற்போது 5.43 கோடி வாக்காளர்கள் உள்ளனர். 97.37 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர். இதில் இறந்தவர்கள் மட்டும் 26.94 லட்சம் பேர். முகவரி இல்லாத 66.44 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் வசதிக்காக சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளான விடுமுறை நாட்களில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்ப்பதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. ஜனவரி 1-ம் தேதியுடன் 18 வயது பூர்த்தி அடைந்தவர்கள் மற்றும் எஸ்.ஐ.ஆர். பணியின் போது வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர் நீக்கப் பட்டவர்கள் படிவம் 6-ஐ வழங்க வேண்டும். அதில் எஸ்.ஐ.ஆர். படிவத்தில் உள்ளதை போன்றே, தங்களது அல்லது தங்கள் பெற்றோரின், 2002, 2005-ம் ஆண்டு காலகட்ட வாக்காளர் பட்டியலில் உள்ள விவரங்களை குறிப்பிட வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக வாக்காளர் சிறப்பு முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. தமிழகம் முழுவதும் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் ஆர்வமுடன் திரண்டு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அளித்தனர். வாக்காளர் சிறப்பு திருத்த பணிகளின் போது படிவத்தை முறையாக பூர்த்தி செய்யாத 12 லட்சம் பேருக்கு மாவட்ட தேர்தல் அதிகாரிகள் சார்பில் கடிதம் அனுப்பப் பட்டு உள்ளது. இதற்கிடையே தமிழகத்தில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப் பட்ட பிறகு பெயர் சேர்ப்பதற்கு கடந்த மாதம் 19-ம் தேதியில் இருந்து கடந்த 2-ம் தேதி வரையில் 7 லட்சத்து 40 ஆயிரத்து 559 பேர் விண்ணப்பித்திருப்பதாக தமிழக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் பட்டியலில் இருந்து 9575 பெயரை நீக்குவதற்கும் விண்ணப்பங்கள் வழங்கப் பட்டு இருக்கின்றன. சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாட்களில் நடைபெற்று வரும் இந்த சிறப்பு முகாம்கள் வருகிற 18-ம் தேதி வரை நடைபெறுகிறது. அடுத்த வாரம் 10, 11 ஆகிய தேதிகளிலும்,அதற்கு அடுத்த வாரம் 17, 18 ஆகிய தேதிகளிலும் இந்த முகாம்கள் நடைபெறும் என்று தெரிவிக் கப்பட்டு உள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| 573.41 | 182.00 |
| பாயிண்ட் 85,762.01 | பாயிண்ட் 26,328.55 |




**தங்கம்** 1 சவரன் ₹1,00,800 | 1 கிராம் ₹12,600



**வெள்ளி** 1 கிலோ ₹257,000 | 1 கிராம் ₹257.00

**டாலர்** ₹90.01

**பெட்ரோல்** ₹100.75 | **டீசல்** ₹92.34




### சர்வாதிகாரிகளை கையாள முடிந்தால்..

# புதினை சிறைப்பிடிக்க உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி சூசகம்..?

**கீவ், ஜன. 05-**

ரஷ்ய அதிபர் விளாடிமீர் புதின் பெயரைக் குறிப்பிடாமல், அவரைச் சிறைப்பிடிக்குமாறு உக்ரைன் அதிபர் வொலோடிமீர் ஜெலென்ஸ்கி கூறியுள்ளார்.

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்கா கைது செய்தது குறித்து செய்தியாளர்களுடன் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி பேசுகையில், "இதற்கு நான் எப்படி பதிலளிக்க முடியும்? நான் என்ன சொல்ல முடியும்? இதுபோன்ற சர்வாதிகாரிகளை கையாள முடிந்தால், அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது அமெரிக்காவுக்குத் தெரியும்" என்று தெரிவித்தார்.



ரஷ்யா - உக்ரைன் இடையே 2022 முதல் போர் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சர்வாதிகாரிகள் என்று பெயரைக் குறிப்பிடாமல் ஜெலென்ஸ்கி யாரைக் குறிப்பிடுகிறார் என்று சமூக ஊடகங்களில் பேசுபொருளாகி உள்ளது. இருப்பினும், புதினைத் தான் சிறைப்பிடிக்க வேண்டும் என்று ஜெலென்ஸ்கி குறிப்பிடுவதாகவும் சிலர் கூறுகின்றனர்.

வெனிசுவேலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தநிலையில், வெனிசுவேலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சனிக்கிழமையில் (ஜன. 3) அமெரிக்க படை கைது செய்தது.

# உக்ரைன் டிரோன் தாக்குதலில் ரஷ்யாவில் ஒருவர் உயிரிழப்பு

**கீவ், ஜன. 05-**

ரஷ்யாவின் எல்லையோர மாகாணமான பெல்ஹொரோட்டில் சாலையில் சென்ற கார் மீது உக்ரைன் நேற்று டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

உக்ரைன், ரஷ்யா இடையே நேற்று 1 ஆயிரத்து 410வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் முயற்சித்து வருகிறார். ஆனாலும் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், ரஷ்யாவின் எல்லையோர மாகாணமான பெல்ஹொரோட்டில் சாலையில் சென்ற கார் மீது உக்ரைன் நேற்று டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். மேலும், 2 பேர் படுகாயமடைந்தனர்.

### அமெரிக்கா திடீர் தாக்குதல்:

# வெனிசுலாவில் 40 பேர் உயிரிழப்பு

**காரகாஸ், ஜன. 05-**

வெனிசுலாவில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 40 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெனிசுலாதலைநகர் காரகாஸ்-இல் உள்ள முக்கிய ராணுவ நிலைகள் மீது அமெரிக்கா, ஆபரேஷன் சதர்ன் ஸ்பியர் என்ற பெயரில் தாக்குதல் நடத்தியது. வெனிசுலாவில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. வெனிசுலா தலைநகர் காரகாஸ்-இல் உள்ள முக்கிய ராணுவ நிலைகள் மீது அமெரிக்கா, ஆபரேஷன் சதர்ன் ஸ்பியர் என்ற பெயரில் நேற்று அதிகாலை வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இதில், அந்நாட்டு அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அமெரிக்க ராணுவம் சிறைபிடித்தது. அவர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் வெனிசுலா எண்ணெய் இருப்பை இனி அமெரிக்க நிறுவனங்களே நிர்வகிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க ராணுவம் தங்கியிருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில் வெனிசுலாவில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலில் ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 40 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் மதுரோவின் பாதுகாப்பிற்கு இருந்த வெனிசுலா ராணுவத்தைச் சேர்ந்தவர்கள்.

அதிபர் மாளிகை மற்றும் ராணுவ முகாம்களுக்கு அருகில் வசித்து வந்த பொதுமக்களும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க தாக்குதலில் பல கட்டிடங்கள் தரைமட்டமானதாகவும், ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக டொனால்ட் ட்ரம்ப் பேசுகையில் இந்த ராணுவ நடவடிக்கையில் ஒரு அமெரிக்க வீரர் கூட காயமடையவில்லை என்றும், முழு தாக்குதலையும் டிவி ஷோ போல தான் நேரலையில் பார்த்ததாகவும் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலா அதிபர் மதுரோ அமெரிக்க சிறையில் அடைப்பு

**நியூயார்க், ஜன. 05-**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஃபுளோரஸ் ஆகியோரை அமெரிக்க படைகள் சிறைபிடித்து நாடுகடத்தப்பட்ட நிலையில், அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்டனர்.

போதைப் பொருள் கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறி, வெனிசுலா நாட்டின் மீது அமெரிக்க படைகள் சனிக்கிழமை அதிகாலை பெரும் வான்வழித் தாக்குதலை நடத்தின. இந்த திடீர் தாக்குதலைத் தொடர்ந்து, வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஃபுளோரஸ் ஆகியோரை அமெரிக்க படைகள் சிறைபிடித்தன.



அதிபர் மதுரோவும், அவரது மனைவியும் உயிருடன் இருப்பதற்கான ஆதாரத்தை அமெரிக்கா வெளியிட வேண்டும் என்று துணை அதிபர் டெல்சி ரோட்ரிக்ஸ் வலியுறுத்திய நிலையில், அமெரிக்க ராணுவத்தின் பிடியில் அதிபர் மதுரோ இருப்பது போன்ற புகைப்படம் வெளியிடப்பட்டது.

அதிபர் மதுரோவும் அவரது மனைவியும் சிறைபிடிக்கப்பட்டு, நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட நிலையில், நியூயார்க்கில் உள்ள ஸ்டீவர்ட் ஏர் நேஷனல் கார்டு தளத்தில் விமானம் தரையிறங்கியது. இதனைத் தொடர்ந்து, இவர்கள் அமெரிக்காவில் உள்ள புரூக்ளின் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அதிபர் மதுரோவும், அவரது மனைவியையும் சிறைக்கு அழைத்து செல்லும் விடியோவை அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது.

# புத்தாண்டு வாழ்த்து தெரிவித்தார் நாடு கடத்தப்பட்ட மதுரோ

**நியூயார்க், ஜன. 05-**

வெனிசுலா அதிபர் மதுரோவை அமெரிக்க படை கைது செய்து அழைத்துச் செல்லும்போது, அங்கிருந்தோருக்கு ஹேப்பி நியூ இயர் என்று மதுரோ வாழ்த்து தெரிவிக்கும் விடியோ வெளியாகியுள்ளது.

வெனிசுலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தநிலையில், வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சனிக்கிழமையில் (ஜன. 3) அமெரிக்க படை கைது செய்தது. இதனிடையே, வெனிசுலாவில் துணை அதிபர் டெல்சி ரோட்ரிகஸை இடைக்கால அதிபராக நியமித்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### வெனிசுலா மீதான தாக்குதல்:

# அதிபர் ட்ரம்ப் நடவடிக்கைக்கு கமலா ஹாரிஸ் கடும் எதிர்ப்பு

**நியூயார்க், ஜன. 05-**

வெனிசுலா மீதான ட்ரம்பின் நடவடிக்கை அமெரிக்காவுக்கு பாதுகாப்பானதல்ல என முன்னாள் துணை அதிபர் கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுதொடர்பாக கமலா ஹாரிஸ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், மதுரோ ஒரு மிருகத்தனமான, சட்டவிரோத சர்வாதிகாரி என்பது இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது மற்றும் விவேகமற்றது என்ற உண்மையை மாற்றாது. இந்த படத்தை நாங்கள் முன்பே பார்த்திருக்கிறோம். எண்ணெய் வளத்தை கைப்பற்றுவதற்கான போரில் பாதிக்கப்போவது என்னவோ அமெரிக்க மக்கள் தான். எண்ணெய் மற்றும் தனிப்பட்ட அதிகாரத்திற்காக ட்ரம்ப் அரசு இந்த நடவடிக்கையைத் தொடர்ந்துள்ளது.

அமெரிக்க மக்கள் இதை விரும்பவில்லை, அவர்கள் பொய்களை கேட்டு அவர்கள் சோர்வடைந்துள்ளனர். இது போதைப்பொருள் அல்லது ஜனநாயகம் பற்றியது அல்ல. இது எண்ணெய் மற்றும் ஒரு பிராந்திய பலசாலியாகக் காட்டிக்கொள்ளும் டொனால்ட் ட்ரம்பின் விருப்பத்தை கொண்டது. அவருக்கு இதில் அக்கறை இருந்திருந்தால், தண்டனை பெற்ற போதைப்பொருள் கடத்தல்காரரை அவர் மன்னித்திருக்க மாட்டார் அல்லது மதுரோவின் கூட்டாளிகளுடன் ஒப்பந்தங்களைத் தொடரும்போது, வெனிசுலாவின் சட்டப்பூர்வமான எதிர்க்கட்சியை ஓரங்கட்டியிருக்க மாட்டார் என கூறியுள்ளார்.

### வெனிசுலா இடைக்கால அதிபராக

# டெல்சி ரோட்ரிகஸ் நியமனம்

**கராகஸ், ஜன. 05-**

வெனிசுலா இடைக்கால அதிபராக டெல்சி ரோட்ரிகஸை நியமித்து அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

வெனிசுலாவின் நிர்வாகத் தொடர்ச்சிக்கும், விரிவான பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிப்பதற்காக துணை அதிபர் டெல்சி ரோட்ரிகஸை இடைக்கால அதிபராக நியமித்து அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.



வெனிசுலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தநிலையில், வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சனிக்கிழமையில் அமெரிக்க படை கைது செய்தது. இதனையடுத்து, வெனிசுலாவில் துணை அதிபரை இடைக்கால அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு: பாகிஸ்தானில் 4 காவலர்கள் பலி

**லாகூர், ஜன. 05**

பாகிஸ்தானில் இரண்டு வெவ்வெறு சம்பவங்களில் அடையாளம் தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 4 காவலர்கள் கொல்லப்பட்டனர்.

சனிக்கிழமை பக்துன்க்வா மாகாணத்தின் லக்கி மார்வாட் மற்றும் பன்னு மாவட்டங்களில் இந்த சம்பவங்கள் நடந்தன. லக்கி மார்வாட் காவல்துறையின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், சராய் நௌராங் நகரில் இருசக்கர வாகனத்தில் வந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பணியில் இருந்த மூன்று போக்குவரத்து போலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.

தாக்குதலுக்குப் பிறகு சம்பவ இடத்திலிருந்து அவர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்று அவர் தெரிவித்தார். இரண்டாவது சம்பவத்தில், மந்தன் பகுதியில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் தங்கள் பணியாளர்களில் ஒருவர் கொல்லப்பட்டதாக பன்னு காவல் துறை தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட காவலர், வீட்டிலிருந்து மந்தன் காவல் நிலையத்தில் பணிக்குச் சென்று கொண்டிருந்தபோது, ஆயுதமேந்திய நபர்கள் அவர் மீது துப்பாக்கி சூடு நடத்தியதாகவும், இதில் அவர் பலியானதாகவும் அவர்கள் கூறினர்.

# கேரளா: பட்டாசு வெடி விபத்தில் ஒருவர் பலி

**திருவனந்தபுரம்,ஜன. 05-**

கேரளாவில் மதவழிபாட்டு தலத்தில் பட்டாசு வெடித்து விபத்தில் ஒருவர் பலியானார். மேலும் ஒருவர் படகாயங்களுடன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் கடதி கிராமத்தில் கிறிஸ்தவ மத வழிபாட்டு தலம் உள்ளது. இந்த வழிபாட்டு தலத்தில் நேற்று திருவிழா கொண்டாட ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. இந்த கொண்டாட்டத்தின்போது பட்டாசு வெடிப்பதற்காக மத வழிபாட்டு தலத்திற்குள்ளேயே நேற்று காலை 8 மணியளவில் பட்டாசுகள் தயாரிக்கப்பட்டன. இந்த வெடி தயாரிப்பில் ரவி, ஜேம்ஸ் ஆகிய இருவர் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், பட்டாசு தயாரித்தபோது திடீரென பட்டாசு வெடித்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் ரவி (வயது 68) உயிரிழந்தார். படுகாயங்களுடன் மீட்கப்பட்ட ஜேம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


### வெனிசுலா அதிபர் மதுரோ சிறைபிடிப்பு:

# அதிபர் ட்ரம்புக்கு மேயர் மம்தானி நேரடி எதிர்ப்பு

**நியூயார்க், ஜன. 05-**

வெனிசுலா மீது நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அந்நாட்டு அதிபர் நிகொலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சிறைபிடித்தது. அவர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடதப்பட்டதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். மேலும் வெனிசுலா எண்ணெய் இருப்பை இனி அமெரிக்க நிறுவனங்களே நிர்வகிக்கும் என்றும், அமெரிக்காவுக்கு சாதகமான அரசு அமையும் வரை அங்கு அமெரிக்க ராணுவம் தங்கியிருக்கும் என்றும் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த தாக்குதலில் பொது மக்கள் ராணுவ வீரர்கள் உட்பட 40 பேர் உயிரிழந்ததாக வெனிசுலா அதிகாரிகள் தெரிவித்தனர். வெனிசுலாவில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்நாட்டின் துணை அதிபரை, தற்காலிக அதிபராக நியமித்து வெனிசுலா சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது. இந்த தாக்குதலுக்கு ரஷ்யா, ஈரான், சீனா உள்ளிட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.




மதுரோவும் அவரது மனைவியும் நியூ யார்க் அழைத்து வரப்பட்டுள்ளதாக ட்ரம்ப் அறிவித்திருந்தார். மேலும், அவர்கள் மீது பயங்கரவாத போதைப்பொருள் சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டு விசாரணை நடைபெறும் என்று அமெரிக்கா தனது அறிக்கையில் தெரிவித்தது. மதுரோ நியூயார்க் சிறையில் தற்போது அடைக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக புகைப்படங்கள் வெளியாகி உள்ளது.

இந்நிலையில் நியூயார்க் மேயர் ஜோஹ்ரான் மாம்தானி இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக தான் ட்ரம்ப் இடம் நேரடியாக தொடர்பு கொண்டு தான் பேசியதாக மாம்தானி பேட்டியில் தெரிவித்தார். அவர் கூறியதாவது, ஒரு இறையாண்மை கொண்ட நாட்டின் மீது ஒரு தலைப்பட்சமாகத் தாக்குதல் நடத்துவது என்பது போர் நடவடிக்கை. இது அமெரிக்காவின் கூட்டாட்சி சட்டங்களுக்கும், சர்வதேச சட்டங்களுக்கும் எதிரானது.

இந்தத் தாக்குதல் வெளிநாடுகளில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தாது, நியூயார்க் நகரில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான வெனிசுலா நாட்டு மக்களையும் இது நேரடியாகப் பாதிக்கும். அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதே தனது நிர்வாகத்தின் முக்கிய நோக்கம் " என்று தெரிவித்தார்.

**05-01-2026**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** அன்னையின் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் தேவை. மனோபயம் மற்றும் தூக்கக் குறைவு ஆகியவை ஏற்படும். பொருட்களை பத்திரமாக பாதுகாப்பது அவசியம். வயிற்று உபாதைகள் எழலாம். 4

**ரிஷபம்:-** அனைத்துச் செயல்களிலும் எளிதில் வெற்றி கிடைக்கும். உல்லாசமான சுற்றுலாப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். மனைவியின் உதவி பெற்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**மிதுனம்:-** கௌரவக் குறைவு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வது சிறப்பு. பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. துன்பம் வந்த போதினிலும் சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

**கடகம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள். புதுப்புது ஆராய்ச்சிகள், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும்.

**சிம்மம்:-** பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். தேவையுள்ள பொருட்கள் மட்டும் வாங்கிச் செலவுகளைக் குறையுங்கள். புதிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம். தேவையற்ற அலைச்சல்கள் தவிர்க்க முடியாததாகும்.

**கன்னி:-** தனவரவு திருப்திகரமாக இருக்கும். ஆரோக்கிய மேம்பாட்டால் ஆனந்தம் பெருகும். பிரிவால் ஏற்பட்ட துன்பம், இணைவால் மாறும். இல்லத்தில், இரு கரையும் புரண்டோடும் சந்தோஷம்.

**துலாம்:-** அரசு ஆதரவு, பெரியோர் உதவி, உத்தியோக வாய்ப்பு என நன்மை தரும் நன்னாள். முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும். தன்னம்பிக்கை, தேகதிடம், தைரியம் ஆகியவை ஓங்கும்.

**விருச்சிகம்:-** குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். கோவில், குளம் பணிகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். அனைத்திலும் எளிதில் வெற்றி கிடைக்கும். சுற்றுலாப் பயணங்கள் சென்று மகிழ்வீர்கள். தன்னம்பிக்கை கூடும்.

**தனுசு:-** அலுவலகத்தில் அதிகாரிகள் சொல் கேட்டு பணிவோடு நடந்தால் அனுகூலமான சூழல் நிலவும். வீட்டில் உள்ள விலை உயர்ந்த பொருட்களை பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

**மகரம்:-** குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள் வாங்குவீர்கள். சாஸ்திர ஆராய்ச்சியும், அதில் தேர்ச்சியும் ஏற்படும். பெரியோர் பால் நேசம் ஏற்படும். தொழில் வளம் பெருகும். 7

**கும்பம்:-** தனவரவு அதிகரிக்கும். எதிரிகள் அடி பணிவர். ஆரோக்கியம் மேம்படும். பயண சுகம் ஏற்படும். தனக்கெனத் தனி வீடு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள் குதுகலமாய் நிறைவேறும்.

**மீனம்:-** தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சியைக் கை விடாது தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி துணிவுடன் செயல்களில் இறங்கினால் வெற்றி உறுதி.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிவு

**மேட்டூர், ஜன. 05-**

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு குறைந்துள்ளது.

மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு நேற்று (ஜன. 4) காலை நிலவரப்படி, விநாடிக்கு 233 கன அடியிலிருந்து 130 கன அடியாக குறைந்துள்ளது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு விநாடிக்கு 11,000 கன அடியாக வீதமும் கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு விநாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணைக்கு வரும் நீரின் அளவைவிட பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு அதிகமாக இருக்கிறது. இதனால், மேட்டூர் அணை நீர் மட்டம் 102.56 அடியிலிருந்து 101.81அடியாக குறைந்துள்ளது. நீர் இருப்பு 67.20 டிஎம்சியாக உள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# மேகாலயாவில் நிலநடுக்கம்

**ஷில்லாங், ஜன. 05-**

மேகாலயாவின் மேற்கு காசி மலைப்பகுதியில் நேற்று காலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 8.21 மணியளவில் ரிக்டர் அளவில் 2.7 ஆக இந்த நிலநடுக்கம் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

10 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 25.53 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 91.20 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் உடனடியாக வெளியாகவில்லை.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2,000 கன அடியாக அதிகரிப்பு

**தருமபுரி, ஜன. 05-**

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து விநாடிக்கு 2,000 கன அடியாக அதிகரித்துள்ளது.

இரு மாநில காவிரி கரையோரம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை முற்றிலுமாக குறைந்தது. மேலும் கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் உபரி நீரின் அளவுகளும் அண்மை காலங்களாக குறைக்கப்பட்டது. இதனால் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு 1,200 கன அடியாகக் குறைந்தது.



ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, காவிரி ஆற்றில் நீர்வரத்து திடீரென அதிகரித்து வினாடிக்கு 2,000 கன அடியாக ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருக்கிறது. திடீர் நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக, ஒகேனக்கல்லில் உள்ள அருவிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. காவிரி ஆற்றில் நீர்வரத்து அவ்வப்போது அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளதால் ஒகேனக்கல்லுக்கு வரும் நீர்வரத்து அளவுகளை தமிழக, கர்நாடக எல்லையான பிலிகுண்டுலு பகுதியில் மத்திய நீர்வளத் துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

### விபி ஜி ராம்ஜி புதிய சட்டத்திற்கு எதிராக

# தெலுங்கானா மாநில சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றம்

**ஐதராபாத், ஜன. 05-**



விபி ஜி ராம்ஜி-க்கு எதிராக தெலுங்கானா சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மத்திய அரசு மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை திரும்பப் பெற்று, விபி ஜி ராம்ஜி என்ற பெயரில் புதிய சட்டத்தை கொண்டு வந்துள்ளது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் காங்கிரஸ் ஆளும், தெலுங்கானா மாநில சட்டமன்றம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை தக்கவைத்துக்கொள்ளவும், அதற்குப் பதிலாக வந்த விபி ஜி ராம்ஜி ராம்ஜி சட்டத்தை ரத்து செய்யவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. புதிய விபி-ஜி ராம்ஜி சட்டம் ஏழைகளுக்கு தீங்கு விளைவிப்பதாகவும், வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்தின் அசல் நோக்கத்தை பலவீனப்படுத்தியதாகவும் சட்டமன்றத்தில் தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி தெரிவித்தார். முன்னதாக கர்நாடக முதல்வர் சித்தராமையா பெங்களூருவில் நடந்த நிகழ்வில் பேசுகையில், "மகாத்மா காந்தியை முதல்முறை கோட்சே கொன்றார். இப்போது இந்த அரசு அவரை இரண்டாம் முறையாகக் கொல்கிறது.

இதன்மூலம் பஞ்சாயத்துகளுக்கு இருந்த அதிகாரங்களைப் பறித்துவிட்டு, இனி எந்த ஊருக்கு வேலை வழங்க வேண்டும் என்பதை டெல்லியில் இருந்து மத்திய அரசே முடிவு செய்யும். முன்பு 100 சதவீதம் ஊதியத்தை மத்திய அரசு வழங்கியது. இப்போது மத்திய அரசு 60 சதவீம் மட்டும் வழங்கும், மீதமுள்ள 40 சதவீதத்தை மாநில அரசுகள் வழங்க வேண்டும் என்கிறார்கள். இது அரசியலமைப்பிற்கு எதிரானது.

பெண்கள், தலித்துகள் மற்றும் சூத்திரர்கள் கையில் பணம் புழங்கக்கூடாது, அவர்கள் சுயமரியாதையோடு வாழக்கூடாது என்று மனுஸ்மிருதி சொல்கிறது. ஆர்எஸ்எஸ் அந்த மனுஸ்மிருதியால் ஈர்க்கப்பட்டது. அந்த ஆர்எஸ்எஸ் தான் பாஜகவை வழிநடத்துகிறது. அதனால்தான் ஏழைகளின் வாழ்வாதாரமான இந்தத் திட்டத்தைச் சிதைக்கப் பார்க்கிறார்கள்." என்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**மரம் மனிதனின் உரம்**

### மருத்துவமனையில் இயக்குநர் பாரதிராஜா திடீரென அனுமதி

### உடல்நிலை சீராக உள்ளதாக தகவல்

**சென்னை, ஜன. 05-**



தமிழ் சினிமாவில் புகழ் பெற்ற இயக்குநர்களில் ஒருவர் பாரதிராஜா. இவர் இயக்குநர் இமயம் என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படுகிறார். முன்னணி நடிகர்கள், நடிகைகளை கொண்டு படத்தை இயக்கியதோடு குணச்சித்திர கதாபாத்திரங்களிலும் நடித்து உள்ளார்.

இதனிடையே, கடந்த ஆண்டு பாரதி ராஜாவின் ஒரே மகனும் நடிகரும், இயக்குநருமான மனோஜ் பாரதிராஜா திடீரென காலமானார். தனது மகன் மனோஜ் பாரதிராஜாவின் மறைவால் ஏற்பட்ட துயரத்திலிருந்து மீள முடியாமல் தவித்து வந்த நிலையில், மலேசியாவில் உள்ள தனது மகள் வீட்டில் சில மாதங்கள் ஓய்வெடுத்து, பின்னர் சென்னை திரும்பினார். தற்போது 80 வயதை கடந்துள்ள பாரதிராஜா, உடல்நலக் குறைவு காரணமாக கடந்த மாதம் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார்.

இந்த நிலையில், பாரதிராஜாவுக்கு திடீரென்று மூச்சுத்திணறல் ஏற்பட்டதை அடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, பாரதிராஜாவின் உடல்நிலை சீராக உள்ளது என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.



ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை அ.தி.மு.க. நிர்வாகிகள் நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக அ.தி.மு.க. எம்.பி., இன்பதுரை நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# தி.மு.க. மூத்த எல்.கணேசன் மறைவு: முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, ஜன. 05-**



தி.மு.க. மூத்த தலைவர் எல். கணேசனின் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட இரங்கல் செய்தியில், மொழிப்போர்க் களத்தில், இந்திமொழியின் ஆதிக்கத்திற்கு எதிராகப் புறப்பட்ட மாணவர் படையின் தளகர்த்தர்களில் ஒருவரும் - கட்சி உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினருமான எல். கணேசன் மறைந்த செய்தியால் பெரிதும் துயருற்றேன்.

சட்டமன்றம் - சட்டமேலவை - நாடாளுமன்றம் என முழங்கிய அவரை இனி நாம் காண முடியாது என்பதை எண்ணும்போதே உள்ளம் வேதனையால் துடிக்கிறது. தலைவர் கலைஞரின் பாசத்தைப் பெற்ற 'எல்.ஜி.', 1989-இல் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, அவரது பாராளுமன்றச் செயலாளராகவும் இருந்தார். நான் தஞ்சை மாவட்டத்திற்குச் செல்லும்போதெல்லாம் தவறாது அவரது இல்லத்திற்குச் செல்வேன்; அவரும் புன்சிரிப்புடன் வரவேற்று, நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் மக்களிடம் பெற்றுள்ள வரவேற்பு குறித்து மகிழ்ச்சி பொங்கப் பெருமையோடு சொல்வார்.

திராவிட இயக்கக் கொள்கைகள் மீது பற்றுகொண்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்று அரசியல் களத்தில் பணியாற்றிய அவர் என்றும் நம் நெஞ்சங்களில் நிறைந்திருப்பார். அவரது பிரிவால் வாடும் கழக உடன்பிறப்புகள், குடும்பத்தினர், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# பொய் வாக்குறுதிகளால் தமிழ்நாடு மக்கள் சலிப்பு

### தமிழில் பதிவிட்ட அமித்ஷா

**புதுடெல்லி, ஜன. 05-**

தி.மு.க. அரசின் பொய் வாக்குறுதிகளால் மக்கள் சலிப்படைந்துள்ளனர் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், தமிழக மக்கள் தி.மு.க. அரசின் அதிகப்படியான ஊழல் மற்றும் பொய் வாக்குறுதிகளால் சலிப்படைந்துள்ளனர். 'தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம்' பேரணி மாநிலம் முழுவதும் தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது, பல லட்சக்கணக்கான மக்களை இப்பேரணி இணைக்கிறது. அதன் நிறைவு விழாவையொட்டி, தமிழ்நாட்டின் புதுக்கோட்டையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் துடிப்பான நிர்வாகிகளுடன் உரையாற்றவுள்ளார். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இரண்டு நாள் சுற்றுப்பயணமாக அந்தமானிலிருந்து தனிவிமானத்தில் திருச்சிக்கு ஞாயிற்றுக்கிழமை வருகை தந்தார். பிறகு ஹெலிகாப்டர் மூலம் புதுக்கோட்டைக்குச் செல்லும் அவர், திருச்சி சாலையில் உள்ள பாலன் நகர் பள்ளத்திவயல் பகுதியில் நடைபெற்ற பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற பிரசாரப் பயணத்தின் நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

### இரண்டு நாள் பயணமாக

# தமிழ்நாடு வந்த மத்திய அமைச்சர் அமித்ஷாவுக்கு உற்சாக வரவேற்பு

**திருச்சி, ஜன. 05-**



இரண்டு நாள் பயணமாக தமிழ்நாடு வந்த மத்திய அமைச்சர் அமித்ஷாவுக்கு பா.ஜ.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனின் தமிழகம் தலை நிமிர தமிழனின் பயணம் என்ற யாத்திரையின் நிறைவு விழா பொதுக்கூட்டம் திருக்கோகர்ணத்தில் பாலன் நகர் அருகே பள்ளத்திவயல் பகுதியில் நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது. இதில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்று பேசினார்.

இதையொட்டி பாதுகாப்பு காரணம் கருதி டிரோன்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டிருந்து. தடையை மீறி டிரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான்வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

முன்னதாக மேலும், பா.ஜ.க. பொதுக்கூட்டம் நடைபெறும் மைதானத்தில் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை கூடுதல் டி.ஜி.பி. மகேஸ்வர தயாள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி. ஜோஸ் நிர்மல் குமார், புதுக்கோட்டை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அபிஷேக் குப்தா ஆகியோர் உடன் இருந்தனர்.

நேற்று மாலை புதுக்கோட்டையில் நடைபெறும் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரனின் பரப்புரை பயண நிறைவு விழாவில் அமித் ஷா பங்கேற்க தமிழகம் வந்தார். அவருக்கு பா.ஜ.க. நிர்வாகிகள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# விபி-ஜி ராம் ஜி சிறந்த திட்டம்: மத்திய அமைச்சர் பெருமிதம்

**புதுடெல்லி, ஜன. 05-**



மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், மத்திய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை விட, விபி-ஜி ராம் ஜி சட்டம் சிறந்தது எனத் தெரிவித்துள்ளார். மேலும்,இந்த திட்டத்தை சிறந்ததாக உருவாக்கியதற்காக பிரதமர் மோடிக்கு நன்றி நாம் தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொர்பாக சிவராஜ் சிங் சவுகான் கூறியதாவது:- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை காப்போம் பிரசாரத்தை தொடங்க இருப்பதாக காங்கிரஸ் அறிவித்துள்ளது. இது உண்மையில் ஊழலை பாதுகாக்கும் பிரசாரம் ஆகும். மகாத்மா காந்தி ஊரக வேலைவாயப்பு திட்டம் ஊழலுக்கு இணையான ஒன்றாகிவிட்டது. கிராம சபைகளால் நடத்தப்பட்ட சமூகத் தணிக்கைகளின் கீழ், 10 லட்சத்து 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புகார்கள் பெறப்பட்டன. ஒரே வேலை மீண்டும் மீண்டும் செய்யப்பட்டது. வேலை இயந்திரம் மூலம் செய்யப்பட்டது. கால்வாய்கள் மற்றும் சாலைகளைச் சுத்தம் செய்வதாகக் கூறி பணம் முறைகேடாகப் பெறப்பட்டது.

30 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் 60 வயதிற்கு மேலானவர்கள். மோடி அரசின் கீழ் 8.48 லட்சம் கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியல் 2 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளது. நிரந்தரச் சொத்துக்கள் உருவாக்கப்பட்டனவா? அந்தப் பணத்தை மேம்பாட்டுப் பணிகளுக்குப் பயன்படுத்த முடியுமா? காங்கிரஸ் ஒரு பொய்களின் தொழிற்சாலை. இப்போது அவர்கள் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது என்று கூறுகிறார்கள்.

விபி-ஜி ராம் ஜி திட்டத்தின் கீழ் ஊழியர்களின் நலன் சிறப்பாக பாதுகாக்கப்படும். அடுத்த நிதியாண்டில் 1,51,282 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். இதில் மத்திய அரசின் பங்கீடு 95,600 கோடி ரூபாயாக இருக்கும். 125 நாட்கள் வேலைக்கான போதுமான பணம் உள்ளது. இது கிராமங்களின் வளர்ச்சியை உறுதி செய்யும்.

மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை விட விபி-ஜி ராம் ஜி சிறந்த திட்டமாக இருக்கும். தவறான தகவல் மற்றும் பொய்களை பரப்ப வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சியை கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பதிலாக இந்த திட்டத்தை சிறந்ததாக உருவாக்கியதற்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இவ்வாறு சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார்.

**தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்**

# எதிர்காலத்தில் த.வெ.க. கூட்டணியில் ஓ.பி.எஸ்., தினகரன் இணைவார்கள்

### செங்கோட்டையன் பேட்டி

**கோவை, ஜன. 05-**



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் ஆகியோர் எதிர்காலத்தில் த.வெ.க. கூட்டணியில் இடம் பெறுவார்கள் என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவையில் த.வெ.க. நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் செய்தியாளர்களிடம் அவர் பேசுகையில், "களத்தில்தான் ஒவ்வொரு அரசியல் கட்சியின் உண்மையான நிலை தெரியும். மக்கள் அளிக்கும் வரவேற்பை பார்க்கும்போது, தமிழக வெற்றிக் கழகம் முதலிடத்தைப் பிடிக்கும் என்பது உறுதி. தற்போது, இரண்டு பெரிய கட்சிகளும் வேண்டாம், புதிய ஒரு கட்சிதான் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற எண்ணமே மக்களிடையே அதிகமாக உள்ளது" என்றார்.

ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவிப்புகள் தேர்தல் நேரத்தில் மட்டுமே வெளியிடப்படுவதாகவும், அது மக்கள் கவனத்தை திசைதிருப்பும் முயற்சியாக இருப்பதாகவும் கூறினார். உலகளவில் செல்வாக்கு மிக்க நபர்கள் குறித்த ஆய்வுகளில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் முதலிடத்தில் இருப்பதாகவும், இரண்டாம் இடத்தில் பிரதமர் இருப்பதாகவும் சொல்லப்படுவதாகக் குறிப்பிட்டார். தமிழக வெற்றிக் கழகம் முதலிடத்தில் இருப்பதால் அடுத்த முதல்வர் விஜய்தான் என்று மக்களின்மத்தியில் கருத்து நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஏற்கனவே "எடப்பாடி பழனிச்சாமி நூறாண்டு காலம் பொதுச் செயலாளராக இருந்தால் நல்லது" எனக் கூறியிருந்ததை சுட்டிக்காட்டிய செங்கோட்டையன், இதன் மூலம் இருவரும் ஒன்றாக செயல்படுகிறார்கள் என்பதே அதன் அர்த்தம் என விமர்சித்தார். "பொங்கல் வரை பொறுங்கள். தமிழக வெற்றிக் கழகத்தில் எத்தனை பேர் இணைவார்கள் என்பதை நீங்கள் நேரில் பார்ப்பீர்கள். நல்லவர் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதே மக்களின் விருப்பம். எம்.ஜி.ஆருக்குப் பிறகு அந்த இடத்தை நிரப்புபவர் விஜய்தான்" என்றார். மேலும், ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி. தினகரன் ஆகியோர் எதிர்காலத்தில் த.வெ.க. கூட்டணியில் இடம் பெறுவார்கள் எனவும் செங்கோட்டையன் தெரிவித்தார்.

### கலைஞரின் மரியாதையை பெற்றவர்:

# ஏ.வி.எம்.சரவணன் படத்திறப்பு விழாவில் நடிகர் ரஜினி பேச்சு

**சென்னை, ஜன. 05**

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா, கலைஞரின் மரியாதையை பெற்றவர் என்று ஏ.வி.எம்.சரவணன் படத்திறப்பு விழாவில் நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்தார்.

சினிமா தயாரிப்பாளர் ஏ.வி.எம்.சரவணன் படத்திறப்பு சென்னையில் நடந்தது. விழாவில் நடிகர் ரஜினி பேசியதாவது:- ஏ.வி.எம். நிறுவனத்தில் நான் 11 படம் நடித்து இருக்கிறேன். அதில் 9 படங்கள் எஸ்.பி.முத்துராமன் இயக்கிய படங்கள் ஆகும். ஒவ்வொரு படத்திலும் கதையை நாம் கேட்கவே வேண்டாம்.

எந்த நடிகருக்கு எந்த மாதிரி படம் பண்ணனும், அவரது ரசிகர்கள் என்ன விரும்புகிறார்கள். அது வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என அனைத்தையும் ஆய்வு செய்து திரைக்கதை செய்து வைத்து விட்டு, நடிகர்களுக்கு அந்தந்த கதாபாத்திரத்துக்கு என்னென்ன பண்ணனும் என்பதை செய்து, இசை, படத்தொகுப்பு எல்லாவற்றிலும் அவரது கை இருக்கும். ஆனால் யாருக்கும் தெரியாது.

மகாபாரத குருஷேத்திர யுத்தத்தில் கண்ணன் எந்த ஆயுதமும் ஏந்தாமல் ரதத்தில் உட்கார்ந்து எப்படி ஜெயித்தாரோ, அந்த மாதிரி அவர் அலுவலகத்தில் அமர்ந்து கொண்டே எல்லா படத்தையும் ஜெயிக்க வைத்தார். எல்லா படத்தையும் வெற்றிப்படமாக்கினார். சினிமா மட்டுமல்லாமல் தனிப்பட்ட முறையிலும் ஏ.வி.எம்.சரவணன் எனக்கு நிறைய உதவி செய்துள்ளார்.

சினிமா உலகத்துக்கு வெளியேயும் ஏ.வி.எம். சரவணனுக்கு மரியாதை இருந்தது. ஏனென்றால் அவர் அப்படி வாழ்ந்தார். அவர் எந்த அரசியல் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. இருந்தாலும் எம்.ஜி.ஆர். அவரை ஷெரீப் ஆக்கி அழகு பார்த்தார். ஜெயலலிதா அவர் மீது அவ்வளவு மரியாதை வைத்திருந்தார். கலைஞரும் அவர் மீது நிறைய மரியாதை வைத்திருந்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இவ்வளவு வேலையை விட்டு விட்டு இங்கு வந்திருக்கிறார். தேர்தல் நேரம் என்று சொன்னால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்துளியும் விலைமதிக்க முடியாது. அந்த மாதிரி இருந்தும் அதை விட்டு விட்டு இங்கு வந்திருக்கிறார். இங்கு வந்திருப்பதால் அவருக்கு 100 ஓட்டுகள் அதிகமாக கிடைத்து விடாது. ஆனாலும் கூட அவர் இங்கு வந்திருப்பது ஏ.வி. எம்.சரவணன் எந்த மாதிரி வாழ்ந்திருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் என்ன மாதிரி ஒரு அன்பும், பண்பும் கொண்டவர், உயர்ந்த உள்ளம் கொண்டவர் என்பதற்கு எடுத்துக் காட்டு.

அசையாத சொத்துக்கு எப்போதுமே மதிப்பு அதிகம். நம் வாழ்க்கையில் நம்மை விரும்புகிறவர்கள், நமது நலனில் அக்கறை கொண்டவர்கள் ஒரு சில பேர்தான் இருப்பார்கள். அவர்கள் அசையாத சொத்துக்கள். எனக்கு அசையாத சொத்துக்களாக கே.பாலச்சந்தர், சோ, பஞ்சு அருணாசலம், ஆர்.எம்.வீரப்பன், சரவணன், கலைஞர் ஆகியோர் இருந்தனர். காலத்தின் சட்டமோ என்னவோ, நாம் யார் மீது பிரியமாக இருக்கிறோமோ அவர்களை காலம் சீக்கிரமே கொண்டு சென்று விடுகிறது. ஒவ்வொருவரும் பிரியும் போது நமக்கு எவ்வளவு பணம், பேர், புகழ், குடும்பம் இருந்தாலும், அனாதையாக உணர்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

### வெனிசுலா விவகாரத்தில்

# அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்: இந்தியா

**புதுடெல்லி, ஜன. 05-**

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட விவகாரத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, "இந்திய வெளியுறவு அமைச்சகம் கூறியதாவது, வெனிசுலாவில் சமீபத்திய நடவடிக்கைகள் கவலையளிக்கிறது. வெனிசுலா மக்களின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புக்கு இந்தியா தனது ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. வெனிசுலாவின் அமைதி மற்றும் நிலைத்தன்மையை உறுதிசெய்து, பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைக்கிறோம்.

மேலும், வெனிசுலாவில் உள்ள இந்தியர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியத் தூதரகம் வழங்கும்" என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும், வெனிவேசுலா அதிபர் மதுரோவை கைது செய்த அமெரிக்காவை வெளிப்படையாக இந்தியா குறிப்பிடவில்லை.

வெனிசுலாவிலிருந்து போதைப் பொருள் கடத்தப்பட்டு வருவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நீண்ட காலமாகக் குற்றஞ்சாட்டி வந்தநிலையில், வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை சனிக்கிழமையில் (ஜன. 3) அமெரிக்க படை கைது செய்தது குறிப்பிடத்தக்கது.

**தலைவர்கள் சொல்வதை படிங்க....**



பெட்டி கடையில் தொடங்கி காட்டு வேலை வரை எல்லா இடங்களிலும் வட இந்தியர்கள் வந்துவிட்டார்கள். இங்கே வாக்குரிமை வாங்குவார்கள், தானாக அவர்களுக்கு அதிகாரம் போய்விடும். ஏற்கெனவே அடிமையாக இருக்கும் நாம் மேலும் அடிமையாகி விடுவோம். இது 10 வருடத்தில் நடக்கும்.

**- சீமான்**



பி.சி.சி.ஐ., முஷ்தபிசூர் ரகுமானை மிகவும் பரிதாபகரமான முறையில் அணியிலிருந்து நீக்கியுள்ளது. விளையாட்டில் புகுத்தப்படும் இந்த அர்த்தமற்ற அரசியல் நம்மை எங்கே கொண்டு செல்கிறது? ஒரு தனிப்பட்ட விளையாட்டு வீரரை அவரது நாட்டின் அரசியல் சூழ்நிலைக்குப் பொறுப்பாக்குவது முறையல்ல.

**- சசி தரூர்**



ஓய்வூதியத் திட்டத்தை ஒழித்துக் கட்டி, ஆசிரியர் - அரசு ஊழியர்களை நடுத்தெருவில் நிறுத்தியது பா.ஜ.க. ஆட்சிதான். நாடு முழுவதும் மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை பா.ஜ.க. அமல்படுத்தும் என்று கூறும் தைரியம் இருக்கிறதா? பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை இதுவரையில் அமல்படுத்தியதுண்டா?

**- சண்முகம்**



செம்மையான நிதி மேலாண்மையை தமிழ்நாடு அரசின் தாரக மந்திரமாக அரசின் எல்லாத் துறைகளும் கடைப்பிடிக்க வேண்டும். சொந்த வரி வருவாயைப் பெருக்குவதிலும் தமிழ்நாடு அரசு மேலும் கவனம் செலுத்த வேண்டும். திட்டச் செலவுகளில் மதிப்பீட்டை மிகாமல் பணிகளை முடிக்க வேண்டும். சிக்கனம் முக்கியம்.

**- ப.சிதம்பரம்**

# திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம்

## கலெக்டர் வ.மோகனச்சந்திரன் பார்வையிட்டார்



**திருவாரூர்,ஜன.05-**

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்றுவருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 5க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டின் சட்டமன்ற அறிவிப்பு எண்.33-ன்படி, தமிழகத்தில் மருத்துவ வசதி குறைந்த, சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகள், மருத்துவ வசதி குறைவாக அமைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள் ஃ குடிசைப்பகுதிகள் போன்ற பகுதிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுத்து முகாம் நடத்தப்பட்டுவருகிறது.

இம்முகாம்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நலன், குழந்தைகள் நலன், இருதய நோய்ப்பிரிவு, மூளை நோய் பிரிவு, தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, இரத்த பரிசோதனைகள், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நடமாடும் இலவச டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம், கதிரிக்கவியல், சர்க்கரை நோய், ஆயுஸ் மற்றும் சமூக–பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள். தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 40 வயதிற்கு மேற்பட்டவர்களை இலக்காகக் கொண்டு நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம் செயல்பட்டுவருகிறது.

அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்று வருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், பார்வையிட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 5க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டையினை வழங்கினார்கள்.

இம்முகாம்கள் உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படுகிறது.

இம்முகாம்களில், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்ஸ்-ரே முதலியவை) காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், மேலும் பதினைந்து துறைகளைச் சார்ந்த நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளும் (பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது.

இம்முகாமில், திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.அசோக், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.சங்கீதா, இணை இயக்குனர் (சுகாதாரம்) மரு.சுரேஷ், திருவாரூர் வட்டார மருத்துவ அலுவலர் மரு.குருதேவ், திருவாரூர் வட்டாட்சியர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கரூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த முகாம்: சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஆய்வு



**கரூர்,ஜன.05-**

கரூர் மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் எம். கோவிந்த ராவ், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் முன்னிலையில் (04.01.2026) 135 கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் குறித்து வாக்குச்சாவடி மையங்களில் முகாம் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி கரூர் மாவட்டத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் முதல் கட்டமாக வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் கடந்த நவம்பர் 4ம் தேதி துவங்கி, இதற்காக கரூர் மாவட்டத்திலுள்ள வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுவீடாக சென்று வழங்கப்பட்டது.

பூர்த்தி செய்யப்பட்டு திரும்ப பெறப்பட்ட படிவங்கள் இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அதனடிப்படையில் கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கும் கடந்த 19.12.2025 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. கரூர் மாவட்டத்தில் மொத்தம் 8,18,672 வாக்காளர்கள் உள்ளனர். பொதுமக்களின் பார்வைக்காக அனைத்து ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் வரைவு வாக்காளர் பட்டியல் வைக்கப்பட்டுள்ளது. வரைவு வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்ப்பு, முகவரி மாற்றம், நீக்கம் தொடர்பான கோரிக்கைகளுக்கு மனு அளிக்க ஜனவரி 18ம் தேதி வரை கால அவகாசம் உள்ளது. இதற்காக வரும் 27 மற்றும் 28 தேதிகளில் முகாம் நடைபெற்றது. அன்று (03.01.2026) மற்றும் (04.01.2026) அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. அம்முகாம்கள் மூலம் புதிய வாக்காளர்கள் சேர்ப்பு, நீக்கம் மற்றும் முகவரி மாற்றம் தொடர்பான மனுக்களை அளிக்கலாம்.

வருகின்ற ஜனவரி 1 அல்லது அதற்கு முன் 18 வயது நிறைவடைந்த வாக்காளர்கள் படிவம் 6 ஐ பூர்த்தி செய்து உறுதிமொழி படிவத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து தகுதியான வாக்காளர்களையும் சேர்ப்பதற்காக சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளது. பெயர் சேர்க்க ஆட்சேபனை தெரிவிக்க படிவம் 7, முகவரி மாற்றம் பதிவு செய்ய படிவம் 8யை பூர்த்தி செய்து வழங்க வேண்டும். வாக்காளர்கள் www.elections.tn.gov.in என்ற இணையதள மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின்படி கரூர் மாவட்டத்தில் இறுதி வாக்காளர் பட்டியல் வருகின்ற 17.02.2026 அன்று வெளியிடப்பட உள்ளது. இவ்வாறு மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / தமிழ்நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்த ராவ் தெரிவித்தார்.

முன்னதாக, 135 கரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆண்டாங்கோவில் கிழக்கு ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் சிறப்பு தீவிர திருத்த வாக்காளர் பட்டியல் குறித்து வாக்குச்சாவடி மையங்களில் முகாம் நடைபெற்று வருவதை மாவட்ட சிறப்பு வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர்/தமிழ் நாடு மின் உற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் எம்.கோவிந்த ராவ் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், வட்டாட்சியர்கள் மோகன்ராஜ் (கரூர்), சத்தியமூர்த்தி (மண்மங்கலம்) மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மீண்டும் புதிய வகை ஓய்வூதியம்

## தமிழக அரசுக்கு தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி நன்றி



**திருவாரூர்,ஜன.05-**

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச்செயலாளர் ஈவேரா திருவாரூரில் இருந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, தமிழ்நாடு அரசின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு அகவிலைப்படியுடன் கூடிய 50 சதவீத ஓய்வூதியம் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அந்த அறிவிப்பில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும். உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு ஆண்டுதோறும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும். ஓய்வூதியதாரர் இறந்துவிட்டால் அவர் ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் பெற்றுவந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். அரசு அலுவலர்கள் ஓய்வு பெறும் போதும், பணிக்காலத்தில் இறக்க நேரிடும் போதும், அவரவரின் பணிக்காலத்திற்கேற்ப 25 இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும். புதிய உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பின், ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதிப் பணிக்காலத்தை நிறைவு செய்யாமல் பணி ஓய்வு பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்கப்படும். பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியில் சேர்ந்து, புதிய தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் இடைப்பட்ட காலத்தில் ஓய்வூதியம் இன்றி பணி ஓய்வு பெற்றவர்களுக்கு சிறப்பு கருணை ஓய்வூதியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அரசு அலுவலர்களின் 23 ஆண்டுகால கோரிக்கைக்கு தீர்வு கண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்பு இல்லையோ என்று நம்பிக்கை இழந்திருந்த நிலையில், முதலமைச்சரின் அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக உள்ளது. தமிழக அரசின் இந்த மகிழ்ச்சியான அறிவிப்பு ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் மனதில் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். பழைய ஓய்வூதியத் திட்டத்தில், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள் செலுத்திய தொகை முழுமையாக திரும்ப பெறப்படும் வசதி இருந்தது. அதுபோல் ஆறு மாதத்திற்கு ஒருமுறை கடனும், ஆண்டுக்கு ஒருமுறை பகுதி இறுதித் தொகையும் பெறப்படும் வாய்ப்புகள் இருந்தது. இந்த வாய்ப்புகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்க வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமயத்தில் மாணவ மாணவிகளுக்கு புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் விதமாக விழிப்புணர்வு பேரணி



**பொன்னமராவதி,ஜன.05-**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பகுதியில் இளைய தலைமுறைகளை சமூக ஊடகங்ளுக்கு அடிமையாக்காமல் அவர்களுக்கு புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் விதமாக வாசிப்பை நேசிப்போம் என்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. திருமயம் அடைக்கலம் மாதா ஆலயத்தில் இருந்து தொடங்கிய பேரணியானது வாசிப்பை நேசிப்போம் என்ற பதாகையுடன் தீரர் சத்தியமூர்த்தி நினைவு நூலகம் வரை நடைபெற்றது அதனை தொடர்ந்து 70-க்கும் மேற்பட்டோர் தங்களை நூலகத்தின் உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டனர். திருமயம் பங்கு தந்தை ஜேம்ஸ்ராஜ் அடிகளார் தலைமையிலும் தமிழ் ஆர்வலர் அகஸ்டின் வழிகாட்டுதலின் படியும் நடைபெற்ற இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள்

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர், கலெக்டர் ஆய்வு



**பெரம்பலூர்,ஜன.05-**

குன்னம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மேலமாத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, குன்னம் அரசு மேல்நிலைப்பள்ளி, பேரளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் ரோவர் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்களை வாக்காளர் பட்டியல் சிறப்பு பார்வையாளர் / பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் எம்.லக்ஷ்மி, , மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் ந.மிருணாளினி முன்னிலையில் (04.01.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 27.12.2025, 28.12.2025, 03.01.2026 மற்றும் 04.01.2026 ஆகிய நாட்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் உள்ளிட்ட தேவைகளுக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் 147. பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்குச்சாவடிகளிலும் மற்றும் 148. குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது.

சிறப்பு முகாம்கள் நடைபெறும் வாக்குச்சாவடி நிலையங்களை பார்வையிட்ட பெரம்பலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் , வாக்காளர்களிடமிருந்து பெறப்படும் படிவங்களை உடனுக்குடன் பிரத்தியேக செயலியில் எவ்வித பிழையும் இல்லாமல் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், பெயர் திருத்தம் தொடர்பாக பெறப்படும் விண்ணப்பங்களை பிழையின்றி கவனமுடன் செயலியில் பதிவேற்ற வேண்டும் எனவும், வெளியூரில் உள்ள வாக்காளர்களின் பெயர் நீக்கம், சேர்த்தல் தொடர்பாகவும், முகவரி மாற்றம் தொடர்பாகவும் ஏதேனும் சந்தேகம் இருந்தால் அந்த இடத்திற்கு நேரடியாக செய்து கள ஆய்வு செய்து பிறகு சேர்த்தல், நீக்கல் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தகுதி உடைய வாக்காளர்கள் எக்காரணத்தை கொண்டும் விடுபடாமல் இருக்க வேண்டும் எனவும், இளம் வாக்காளர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் இடம்பெறச் செய்ய வேண்டும் எனவும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

27.12.2025, 28.12.2025 மற்றும் 03.01.2026 ஆகிய நாட்களில் நடைபெற்ற சிறப்பு முகாம்களில் 147 பெரம்பலூர் (தனி) சட்டமன்ற தொகுதியில் புதிய வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6ல் 4,546 புதிய படிவங்கள், முன் மொழியப்பட்ட வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை தெரிவிக்க அல்லது ஏற்கனவே உள்ள பதிவை நீக்க படிவம் 7ல் 49 படிவங்கள், முகவரி மாற்றம், வாக்காளர் விவரங்கள் திருத்தம், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மாற்றம் மாற்றுத்திறனாளிகள் எனக் குறிப்பிட படிவம் 8ல் 2,568 படிவங்கள் என மொத்தம் 7,163 படிவங்களும், 148 குன்னம் சட்டமன்ற தொகுதியில் புதிய வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6ல் 3,681 புதிய படிவங்கள், என மொத்தம் 5,623 படிவங்களும், ஆக மொத்தம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும், புதிய வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க படிவம் 6ல் 8,227 புதிய படிவங்கள், முன் மொழியப்பட்ட வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை தெரிவிக்க அல்லது ஏற்கனவே உள்ள பதிவை நீக்க படிவம் 7ல் 89 படிவங்கள், முகவரி மாற்றம், வாக்காளர் விவரங்கள் திருத்தம், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை மாற்றம் மாற்றுத்திறனாளிகள் எனக் குறிப்பிட படிவம் 8ல் 4,470 படிவங்கள் என மொத்தம் 12,786 படிவங்கள் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.கண்ணன், வருவாய் கோட்டாட்சியர் அனிதா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சக்திவேல், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், வட்டாட்சியர்கள் / உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் பாலசுப்பிரமணியன் (பெரம்பலூர்), திரு,முத்துக்குமரன் (ஆலத்தூர்), சின்னதுரை(குன்னம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த சிறப்பு முகாம்கள்

## வாக்காளர் பட்டியல் பார்வையாளர் லட்சுமி நேரில் ஆய்வு



**அரியலூர்,ஜன.05-**

அரியலூர் மாவட்டம், 149-அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150-ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற்ற வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாமினை சிறப்பு தீவிரத் திருத்த (SIR) வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆணையர் M.லட்சுமி, , மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் பொ.இரத்தினசாமி, முன்னிலையில் (04.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், 2026-க்காக மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், திருத்தம், முகவரி மற்றும் புகைப்படம் மாற்றம் ஆகியவற்றிற்காக வரும் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் கடந்த 27.12.2025, 28.12.2025 மற்றும் 03.01.2026 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வாக்காளர்களிடமிருந்து படிவங்கள் பெறப்பட்டுள்ளது. அதன்தொடர்ச்சியாக இன்றையதினம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறுகிறது. அந்தவகையில் 150-ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுச்சாவடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னவளையம் அரசு உயர்நிலைப்பள்ளி, ஜெயங்கொண்டம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களிலும் மற்றும் 149-அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மணகெதி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கரு.பொய்யூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, வாரணவாசி சமத்துவபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம் செய்தல் மற்றும் திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்கள் நடைபெறுவதை சிறப்பு தீவிரத் திருத்த (SIR) வாக்காளர் பட்டியல் பார்வையாளர் / மாற்றுத் திறனாளிகள் நலத்துறை ஆணையர் M.லட்சுமி, நேரில் பார்வையிட்டு தற்போது வரையில் பெறப்பட்டுள்ள படிவங்களின் எண்ணிக்கை குறித்தும், வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட படிவங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்தும், இணைப்பு ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்தும் ஆய்வு செய்தார். இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி. பிரேமி (அரியலூர்), ஷீஜா (உடையார்பாளையம்), வட்டாட்சியர்கள் சம்பத் (ஜெயங்கொண்டம்), முத்துலெட்சுமி (அரியலூர்) இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்ட கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் நலச்சங்கம் சார்பில் ஆலோசனைக் கூட்டம்



**பெரம்பலூர்,ஜன.05-**

பெரம்பலூர் மாவட்ட கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் நலச்சங்கம் சார்பில் பெரம்பலூர் நான்கு ரோடு பகுதி அருகே உள்ள தனியார் அரங்கத்தில், கறிக்கோழி உற்பத்தி கூலி உயர்வு மற்றும் வேலை நிறுத்தம் குறித்த கோழி பண்ணையாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது சங்கத்தின் மாவட்ட தலைவர் தங்கபாண்டியன், செயலாளர் சுரேஷ், ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்,

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கறி கோழி உற்பத்தியாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர், கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் 400 -க்கும் மேற்பட்ட கறி கோழி வளர்ப்பு உற்பத்தி விவசாயிகள் இருந்து வரும் நிலையில் பெரம்பலூர் மாவட்ட மட்டுமல்லாமல் தமிழகத்தின் பல்வேறு மாவட்டத்திலும் உள்ள கறிக்கோழி உற்பத்தி விவசாயிகள் வளர்ப்பு . கூலி உயர்வு இல்லாமல் பாதிக்கப்பட்டு வருவதாகவும், ஒப்பந்தம் செய்துள்ள கோழி கொள்முதல் நிறுவனங்கள், ஆறு வருடங்களுக்கு மேலாக ஒரே விலையை மட்டும் கொடுத்து வருகின்றனர்

ஆனால் கோழி வளர்ப்பதற்கான தீவன விலைகள், மூலப் பொருள்கள் விலைகள், அதிகரித்துள்ளன அதற்கேற்றார் போல் கோழி உற்பத்தி விலையை உயர்த்தாமல் இருந்து வருகின்றனர் இதுகுறித்து பலமுறை நிறுவனத்திடம், கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை என்பதால், உடனடியாக இதில் தமிழக அரசுதலையிட்டு கோழி வளர்ப்பு விவசாயிகளை அழைத்து கறி கோழி உற்பத்தியாளர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி கொள்முதல் விலையை கிலோவுக்கு ரூ 20 ரூபாய் அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும், இல்லையென்றால் முதல் கோழி வளர்ப்பை நிறுத்தி தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதாக தெரிவித்துள்ளனர். மேலும் இதனை மாவட்ட கலெக்டர் தமிழக அரசுக்கும், தமிழக முதல்வர் கவனத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும் எனவும் கேட்டு கொண்டுள்ளனர். கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் போராட்டத்தால், கறிக்கோழியின் விலை உயரும் சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது




மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சுற்றுலாதுறையால் நடத்தப்படும் இந்திய நாட்டிய திருவிழாவில் திருச்சியை சேர்ந்த குடக்குத்து கலையகம் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடந்தது.

# மயிலாடுதுறை குருஞானசம்பந்தர் மெஷின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நாட்டு நல பணி திட்டம் தொடக்க விழா



**மயிலாடுதுறை,ஜன.05-**

மயிலாடுதுறையில் தருமபுர ஆதீனத்திற்கு சொந்தமான குருஞான சம்பந்தர் மிஷின் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 25 மாணவர்களைக் கொண்டு தருமபுர ஆதீன திருமண திருமடத்தில் நாட்டு நல பணி திட்ட சிறப்பு முகாம் ஆனது தருமே ஆதினம் 27ஆவது குரு மகா சன்னிதான ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலாமணி தேசிய ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமி அருளாசியுடன் தொடங்கி வைத்தார் இம் முகமாயிருக்கு திட்ட அலுவலர் பள்ளியின் இயற்பியல் துறை ஆசிரியர் மு. சிவக்குமார், வரவேற்புரை ஆற்றினார் பள்ளியின் ஆட்சி மன்ற குழு துணை தலைவர் பேராசிரியர் சிவ.முருகேசன் தலைமை வகித்தார் முகாமினை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சி.பா. கார்த்திகேயன் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார் தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரியின் செயல் முனைவர் ரா. செல்வ நாயகம் நாட்டு நல பணி திட்டத்தினை பற்றி மாணவர்களுக்கு சிறப்புரை ஆற்றினார் இம்முகாமிற்கு பள்ளி ஆட்சி மன்ற குழுவில் தலைவர் பேராசிரியர் ஆர். ஞானசேகரன் நிர்வாக செயலர் வி. பாஸ்கரன் பள்ளியின் முதல்வர் ஆர் சரவணன் வைத்தீஸ்வரன் கோயில் ஸ்ரீ குரு ஞான சம்மந்தம் மிஷின் ஸ்ரீ முத்தையா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் முதல்வர் ஆர். ஜெகதீஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர் இம் முகாம்குரிய களப்பணி கருவிகளை குருமாக சன்னிதானம் மாணவர்களுக்கு வழங்கினார்கள் அதனை தொடர்ந்து மாணவர்கள் தருமைஆதீன வீதிகள் விநாயகர் கோயில் வளாகங்கள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி வளாகங்கள் ஆகிய பகுதிகளை தூய்மை செய்து உழவாரப் பணியினை மேற்கொண்டார்கள் மயிலாடுதுறை குருஞானசம்பந்தர் மிஷன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றும் அனைத்து நிலை ஆசிரியர் பெருமக்களும் அலுவலர் மருத்துவ பரிசோதனையில் ரத்த வகை ரத்தத்தின் சர்க்கரை அளவு பரிசோதனை செய்து கொண்டனர் இம்முமுகாமில் பள்ளியின் துணை முதல்வர் அனைத்து நிலை பொறுப்பாசிரியர்கள் ஆசிரிய பெருமக்கள் உடற்கல்வி ஆசிரியர்கள் எலைட் லைன் சங்கத்தின் செயலர் சபாநாயகம், பொருளாளர் பி. கிருஷ்ணகுமார் குருமா சன்னிதானத்திலும் அருளாசி பெற்றவர்கள் முகாமில் இறுதி நாளில் மரக்கன்றுகள் நடப்பட்டன மேலும் எலைட் லைன் சங்கத்தின் தலைவர் முருகேசன் மற்றும் அதன் உறுப்பினர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இம் முகாமின் நிறைவாக துணை திட்ட அலுவலர் பள்ளி தமிழாசிரியர் எஸ்.வைத்தியநாதன் நன்றியுரை கூற நிறைவு பெற்றது

# வரும் பிப்ரவரி மாதத்திற்கு பின் வசை பாடியவர்கள், குறை சொல்பவர்கள் வாழ்த்து பாடுகின்ற அளவிற்கு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆன்மீக பொக்கிஷமாக திகழும்

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



**சென்னை,ஜன.05**

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.பி.கே.சேகர்பாபு தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வரும் அறுபடை வீடுகள் காட்சியரங்கம், நாழிக்கிணறு புனரமைப்பு பணிகள், சூரசம்ஹார காட்சியரங்கம், சஷ்டி மண்டபம், விபூதி தயாரிப்பு கூடம், பஞ்சாமிர்த தயாரிப்பு கூடம், பக்தர்கள் தங்கும் விடுதி ஆகிய திருப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர். பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

கடந்த ஆட்சியில் அதாவது 2021-க்கு முன்பு திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பெருந்திட்ட வரைவின் கீழ், திருப்பணிகளை மேற்கொள்ள ஹெச்.சி.எல். என்ற தனியார் நிறுவனம் அனுமதி கோரிய நிலையில் 10 ஆண்டுகள் அனுமதி வழங்கப்படாமல் கிடப்பில் இருந்தது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக ஆட்சி ஏற்பட்டவுடன் அந்நிறுவனம் அணுகியவுடன், அதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட்டது. மாஸ்டர் பிளான் திருப்பணிகள் இரண்டு கட்டங்களாக அதாவது ஹெச்.சி.எல். நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் ஒரு பகுதியாகவும், திருக்கோயில் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றொரு பகுதியாகவும் எடுத்துக்கொள்ளப்பட்டன. திருப்பணிகள் அனைத்தும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு உலகெங்கும் வாழும் முருக பக்தர்கள் திரும்பி பார்க்கின்ற வகையில் கடந்த 07.07.2025 அன்று குடமுழுக்கு வெகு விமரிசையாக நடத்தப்பட்டதை எவரும் மறுக்க முடியாது.

மேலும். பக்தர்களின் வசதிக்காக அறுபடை வீடுகளுக்கு சென்று தரிசனம் செய்வதற்கு இணையாக ஏற்கனவே ஒரு படை வீடு திருச்செந்தூரில் அமைந்திருப்பதால் மீதமிருக்கின்ற ஐந்து படை வீடுகளையும் அமைகின்ற பணிகளும், இரண்டு சஷ்டி மண்டபங்கள், 500 நபர்கள் தங்குகின்ற வகையிலான டார்மண்ட்ரி அறைகளும், கூடுதல் சுகாதார வளாகங்கள், கழிவு நீரிலுள்ள கழிவுகளை அகற்றி மறுசுழற்சி செய்திடும் வகையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், நாழிக்கிணறு புனரமைப்பு பணிகள் ஆகியவற்றை அலுவலர்களுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தோம். இந்த அனைத்து பணிகளையும் பிப்ரவரி மாத இறுதிக்குள் நிறைவு செய்து, பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்குண்டான அறிவுரைகளை வழங்கியிருக்கின்றோம்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தளவில் ஆன்மிகத்திற்கு எதிரான ஆட்சி என்று பரப்புரை மேற்கொள்ளுகின்ற விஷமத்தன பிரச்சாரங்களுக்கு முடிவு கட்டுகின்ற ஒரு கோயிலாக திருச்செந்தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பெருந்திட்ட வரைவு அமையும் என்று நம்புகின்றோம். இந்த ஆட்சியின் மீது வசை பாடியவர்கள், குறை சொல்பவர்கள் வரும் பிப்ரவரி மாதத்திற்கு பிறகு வந்து பார்த்து வாழ்த்து பாடுகின்ற அளவிற்கு இந்த முருகன் திருக்கோயில் ஒரு பொக்கிஷமாக திகழும்.

திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே போகிறது. பக்தர்களின் தேவைகளுக்கேற்ப கூடுதலாக திட்டமிட்டு, அதாவது இன்னும் 20 ஆண்டுகளுக்கு பிறகு என்ன தேவையோ அதையும் கட்டமைக்கின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்றோம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் பெருந்திட்ட வரைவின் கீழ், திருச்செந்தூர், பழனி, கன்னியாகுமரி, மருதமலை திருத்தணி என 19 திருக்கோயில்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அனைத்து திருக்கோயில்களின் பணிகளும் நிறைவு பெறுகின்ற போது உண்மையான ஆன்மிக மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை அனைவரும் ஒத்துக் கொள்ளகின்ற நிலை உருவாகும். சஷ்டி விழாவின் போது தற்காலிக பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டன. அந்த இடங்களில் நிரந்தர பேருந்து நிலையங்களை உருவாக்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது

இறுதி கட்டப்பணி பேருந்து நிலையம் தான். அந்த பணியும் நிறைவுறும் போது பக்தர்களுக்கு அவர்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையில் அமையும் என்று நம்புகிறோம். சுமார் 66 ஏக்கர் நிலப்பரப்பிலே அமைந்திருக்கின்ற இந்த திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றி தருவோம்.

இத்திருக்கோயில் தரிசனத்திற்கு ஆன்லைன் மூலம் புக்கிங் செய்யும் வசதியினை உருவாக்குவதற்கான பணிகளை துவங்கியவுடன் சிலர் நீதிமன்றத்திற்கு சென்றிருக்கின்றார்கள். நீதிமன்றமும் ஆன்லைன் எப்படி செய்யப் போகின்றனர் என்ற கருத்துருக்களை முழுமையாக பெறாமலே தடை கோரி வந்திருக்கிறீர்கள், ஆகவே எந்த விதமான தடையும் வழங்க முடியாது என்று தெரிவித்துள்ளது. திருக்கோயில்களின் வளர்ச்சி பணிகளுக்கு நாங்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் தடைகளை ஏற்பட்டுவதற்கு ஒருபுறம் முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. தடைகள் பல உண்டு என்றாலும் அதை தகர்த்தெறிந்து பக்தர்களுடைய தேவைகளை நிறைவு செய்கின்ற திறன்மிக்க தோள்களும், மதிநுட்பமும் தமிழ்நாடு அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் உண்டு என்ற வகையில் தடைகளை தகர்த்து தான் இந்த பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். செய்தியாளர்கள் கோரியது போல் ஆன்லைன் வசதிகள், பிரேக் தர்ஷன் போன்றவற்றை கொண்டு வருவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் கைபேசியினை கொண்டு செல்கிறார்களே என்று கேட்டீர்கள். ஒரு அரசே அனைத்தையும் கட்டுப்படுத்தி நிறுத்தி விட முடியாது. பக்தர்களுக்கும் அதில் அக்கறை இருக்கின்றது. அவர்களும் சட்டத்தை மதித்து இது போன்ற சூழல்களில் பிறப்பிக்கிறப்படுகின்ற உத்தரவுகளை கடைபிடிக்க வேண்டும் என்று துறையின் அமைச்சர் என்ற முறையில் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் முனைவர் துரை.இரவிச்சந்திரன், , தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் க. இளம்பகவத், இந்து சமய அறநிலையத் துறை தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, மண்டல இணை ஆணையர்கள் எம். அன்புமணி, கவிதா பிரியதர்ஷினி, திருக்கோயில் இணை ஆணையர்/செயல் அலுவலர் கே.ராமு, துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசு இஸ்லாமியர்களின் இட ஒதுக்கீட்டை 5 சதவிகிதமாக அதிகரித்து தர வேண்டும்

## தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாவட்ட தலைவர் வலியுறுத்தல்

**திருவாரூர்,ஜன.05-**

கடந்த தேர்தலின் போது இஸ்லாமியர்களுக்கு இட ஒதுக்கீட்டை அதிகரித்து தருவோம் என திமுக தனது தேர்தல் அறிக்கையில் கூறி இருந்தது, இஸ்லாமியர்களின் நெடு நாளைய கோரிக்கையை நிறைவேற்றாமல் மறு தேர்தலை நோக்கி இந்த ஆட்சி சென்று கொண்டிருக்கிறது, போராட்டம் நடத்தினால் தான் கோரிக்கைகள் செவியேற்க்கப்படும் என்பது நல்லாட்சிக்கு சான்று கூறாது, எனவே வரும் தேர்தலுக்கு முன் சிறுபான்மை இஸ்லாமியர்களின் ஜீவாதார கோரிக்கையான இட ஒதுக்கீட்டை குறைந்தப்பட்சம் 5 சதவீதமாக அதிகரித்து தர வேண்டும்,பாஜக ஆளும் மத்தியப்பிரதேசத்தின் இந்தூர் நகரில் குடிதண்ணீரில் கழிவு நீர் கலந்து 10க்கும் அதிகமனவர்கள் இறந்துள்ளனர் பலர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையின் அவசரப் பிரிவில் உள்ளனர்,மக்களின் உயிரைக்குறித்து கவலைப்படாமல் பாஜக அமைச்சர்கள் ஆணவமாக பதிலளிக்கின்றனர்,பாஜவின் டபுள் எஞ்சின் அரசின் தோல்விக்கு பொறுப்பேற்று பிரதமர் மோடி பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும்,அனைத்து சர்வதேச விதிகளையும் மீறி தென் அமெரிக்க நாடான வெனிசுலாவில் தாக்குதல் நடத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதன் அதிபர் நிகோலஸ் மதுரோவை அமெரிக்கப்படைகள் நாடு கடத்தியுள்ளன, வேறு ஒரு நாட்டின் இறையாண்மையை குழி தோண்டிப்புதைக்கும் அமெரிக்காவின் இந்த செயலை வன்மையாக கண்டிக்கதக்கது.இவ்வாறு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் திருவாரூர் வடக்கு மாவட்ட தலைவர் பீர் முகமது வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டு விழாவினை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தனர். இதில் கலெக்டர் மு.அருணா, சின்னத்துரை எம்எல்ஏ, முன்னாள் அரசு வழக்கறிஞர் செல்லப்பாண்டியன், வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா கலந்து கொண்டனர்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நாகை மாவட்ட செயலாளர் நியமனம்



**நாகப்பட்டினம்,ஜன.05-**

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மறுசீரமைப்பு பணியில் 234 - தொகுதிகளுக்கான மாவட்ட செயலாளர்கள் வரையரையில் நாகப்பட்டினம் சட்டபேரவை தொகுதி மாவட்ட செயலாளராக திருமருகல் ஒன்றியம் சேஷமூலை பகுதியைச் சேர்ந்த கு.சக்திவேல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் சேஷமூலை ஊராட்சியின் முகாம் செயலாளராகவும் ஒன்றிய துணை செயலாளராகவும், ஒன்றிய செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

# வானகரத்தில் திருநங்கை அடித்துக்கொலை

**சென்னை ஜன 05-**

சென்னை போரூர் தொல்லியார் அகரம் பகுதியைச் சேர்ந்த திருநங்கை சில்பா என்கின்ற பாண்டி (35) என்பவர் நேற்று முன் தினம் இரவு பாலியல் தொழிலுக்காக வானகரம் சர்வீஸ் அருகில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த சில மர்ம நபர்கள் அவரை அழைத்து அருகே உள்ள பழைய குடோனுக்கு அழைத்து சென்று அடித்து கொலை செய்து சடலத்தை அங்கேயே போட்டு விட்டு சென்றுள்ளனர்

பின்னர் நேற்று காலை குடோனில் பணிபுரியக்கூடிய செக்யூரிட்டி வந்து பார்த்தபோது இறந்த நிலையில் திருநங்கை இரண்டு கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து இது குறித்து வானகரம் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார் தகவல் இருந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் இருந்த நிலையில் கடந்த திருநங்கையின் உடலை மீட்டு பிரத பரிசோதனைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் மேலும் இச்சமூகம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் மற்றும் மனைவியை திருநங்கை சில்பாவிற்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்த நிலையில் முதற்கட்டமாக அவரது கணவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும் சம்பவம் குறித்து வேறு யாருக்காவது தொடர்பு உள்ளதா என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னையில் இதுவரை 1,678 நபர்களிடமிருந்து 623.42 மெட்ரிக் டன் பழைய சோபாக்கள், மெத்தைகள் உள்ளிட்ட பொருட்கள் பெறப்பட்டுள்ளது



**சென்னை,ஜன.05**

நேற்று நாள் மட்டும் 91 இடங்களிலிருந்து 41.26 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூர் எரியூட்டும் நிலையத்திற்கு கொண்டு சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை ஒவ்வொரு சனிக்கிழமைகளில் பெற்று அகற்றிடும் புதிய நடவடிக்கை கடந்த 11.10.2025 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது.

91 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 41.26 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டி அகற்றப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம சென்னை" செயலியில் (App) பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதன் அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள். இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at
Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



சென்னை அடையாறு மண்டலம் 188வது வார்டில் ரூ.42.40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட இரண்டு பயணியர் நிழற்குடைகளை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். இதில் தெற்கு வட்டார துணை ஆணையர் அதாப்ரசூல், மண்டல குழு தலைவர்கள் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் மோகன்குமார், மண்டல அலுவலர் செந்தில்குமார், செயற்பொறியாளர் ஹார்டின் ரொஸோரியோ கலந்து கொண்டனர்.

### டி-20 உலகக் கோப்பை தொடர்:

# இந்தியாவில் விளையாட வங்கதேச அணி மறுப்பு




**டாக்கா, ஜன. 05-**

டி-20 உலகக் கோப்பை தொடரில் எங்களது போட்டிகளை இந்தியாவுக்கு வெளியே நடத்துங்கள் என்று ஐ.சி.சி.க்கு வங்கதேசம் வேண்டுகோள் விடுத்துள்ள நிலையில், இந்தியாவில் விளையாட மறுப்பு தெரிவித்துள்ளது.

**ரூ.9.2 கோடிக்கு ஒப்பந்தம்....**

ஐ.பி.எல். போட்டிக்கான ஏலத்தில் 7 வங்கதேச வீரர்கள் இடம்பெற்று இருந்தனர். இதில் வேகப்பந்து வீரர் முஷ்தபிசுர் ரகுமானை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ரூ.9.2 கோடிக்கு ஒப்பந்தம் செய்தது. வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக தாக்குதல் சம்பவம் நடைபெற்று வருவதால் ஐ.பி.எல். போட்டியில் முஷ்தபிசுர் ரகுமான் விளையாட கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பல்வேறு இந்து அமைப்புகள் வங்கதேச வீரர் ஐ.பி.எல்.லில் விளையாட கூடாது என்று தங்கள் எதிர்ப்பை தெரிவித்தன.

**விடுவிக்க வலியுறுத்தல்...**

வங்கதேச கிரிக்கெட் வீரரை ஒப்பந்தம் செய்த அந்த அணியின் உரிமையாளர் ஷாருக்கானை தேச துரோகி என்று பா.ஜ.க, இந்து அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன. அவரை அணியில் இருந்து விலக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன. இதனால் நெருக்கடிக்கு உள்ளான பி.சி.சி.ஐ., வங்கதேச வேகப்பந்து வீச்சாளர் முஸ்தபிசுர் ரகுமானை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (கேகேஆர்) அணியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கோரியது. பி.சி.சி.ஐ.-யின் உத்தரவை ஏற்று, முஸ்தபிசுர் ரகுமானை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி விடுவித்துள்ளது.

**இலங்கைக்கு மாற்ற...**

ஐ.பி.எல்.லில் இருந்து முஸ்தபிசுர் நீக்கப்பட்ட நிலையில், ஆவேசமாக பேசிய வங்கதேச விளையாட்டு அமைச்சக ஆலோசகர் ஆசிப் நஸ்ருல், "டி20 உலக கோப்பையில் வங்கதேசத்தின் போட்டிகள் அனைத்தையும் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மாற்ற வேண்டும். ஐ.பி.எல்.லில் ஒப்பந்தம் போட்ட பிறகும், வங்கதேச வீரர் இந்தியாவில் விளையாட முடியாதென்றால், எப்படி வங்கதேச வீரர்களால் பாதுகாப்பாக உணர முடியும்? ஐ.பி.எல். போட்டிகளை வங்கதேசத்தில் ஒளிபரப்ப தடை செய்ய வேண்டும் என ஆலோசனை கூறியுள்ளேன். மேலும் எந்த சூழ்நிலையிலும் வங்கதேசத்தையோ எங்கள் வீரர்களையோ அவமதிப்பதை பொறுத்துக் கொள்ள மாட்டோம். அடிமை மனநிலையில் இருந்து எப்போதோ விடுபட்டு விட்டோம்" என்று தெரிவித்தார்.

**வங்கதேச அரசு ஆலோசனை...**

இந்த நிலையில் இந்தியாவில் நடைபெற இருக்கும் டி20 உலகக் கோப்பையில் வங்கதேச போட்டிகள் அனைத்தையும், இந்தியாவிற்கு வெளியே நடத்தப்பட வேண்டும் என ஐ.சி.சி.-க்கு முறையாக வேண்டுகோள் விடுத்துள்ளது வங்கதேசம் கிரிக்கெட் போர்டு. பாதுகாப்பு கவலை அளிப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது. தற்போதுள்ள சூழ்நிலை மதிப்பீடு அளவின்படி, இந்தியாவில் வங்கதேச அணியின் பாதுகாப்பு குறித்து கவலை அதிகரித்து வரும் நிலையில், வங்கதேச அணியை இந்தியாவுக்கு அனுப்ப வேண்டுமா? என்பது குறித்து பரிசீலனை செய்யவும் என வங்கதேச அரசு ஆலோசனை வழங்கியுள்ளது. இதனடிப்படையில் வங்கதேச கிரிக்கெட் போர்டு, முறையாக ஐ.சி.சி.-க்கு வங்கதேச போட்டிகளை அனைத்தையும் வேறு இடத்தில் (இந்தியாவுக்கு வெளியில்) நடத்த பரிசீலனை செய்யுங்கள் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என பிசிபி தெரிவித்துள்ளது. இந்தியா- இலங்கை வருகிற பிப்ரவரி 7-ந்தேதி முதல் மார்ச் 8-ந்தேதி வரை டி20 உலகக் கோப்பையைநடத்துகிறது.

# டி-20 உலக கோப்பைக்கான வங்கதேச அணி அறிவிப்பு

## ஆல்-ரவுண்டர்கள் 7 பேர் சேர்ப்பு

**டாக்கா, ஜன. 05-**

டி20 உலகக் கோப்பைக்கான 15 பேர் கொண்ட வங்கதேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. லிட்டன் தாஸ் தலைமையில் அதிகமான ஆல்ரவுண்டர்களைக் கொண்டதாக இந்த அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**வரும் பிப்.7-ம் தேதி...**

டி20 உலகக் கோப்பை போட்டிகள் வரும் பிப். 7 முதல் மார்ச்.8ஆம் தேதி வரை நடைபெற இருக்கின்றன. இதற்கான அணிகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை அரையிறுதிக்கு முன்னேறாத வங்கதேச அணி இந்தமுறை வரலாறு படைக்குமா என எதிர்பார்க்கப்படுகிறது.

**வங்காளதேச அணி:**

லிட்டன் தாஸ் (கேப்டன்), தன்சித் ஹாசன், பர்வேஸ் ஹொசைன் எமோன், சைஃப் ஹாஸன், டஹ்கித் ஹிருதோய், ஷமிம் ஹொசைன், நசும் அகமது, முஷ்தஃபிசூர் ரஹ்மான், தன்சிம் ஹசன் சகிப், டஸ்கின் அகமது, ஷெயிஃப் உதைன், ஷொரிஃபுல் இஸ்லாம். வங்கதேச அணிக்கான போட்டிகள் வருமாறு., மே.இ.தீ. அணிக்கு எதிராக (பிப்.7, கொல்கத்தா), இத்தாலிக்கு எதிராக (பிப்.9, கொல்கத்தா), இங்கிலாந்துக்கு எதிராக (பிப்.14, கொல்கத்தா), நேபாளத்துக்கு எதிராக (பிப்.17, மும்பை).

### ஆஷஸ் தொடரின் 5-வது டெஸ்ட்:

# இங்கிலாந்து 3 விக்கெட் இழப்புக்கு 211 ரன்கள்


**மெல்போர்ன், ஜன. 05-**

ஆஷஸ் தொடரின் 5-வது மற்றும் கடைசி போட்டி சிட்னியில் இன்று தொடங்கியது. டாஸ் வென்ற இங்கிலாந்து பேட்டிங்கை தேர்வு செய்தது.

**இருவரும் அரைசதம்...**

அந்த அணியின் தொடக்க வீரர்கள் ஜாக் கிராலி (16), பென் டக்கெட் (27), ஜேக்கப் பெத்தேல் (10) ஆகியோர் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தனர். இதனால் இங்கிலாந்து 57 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்தது. 4-வது விக்கெட்டுக்கு ஜோ ரூட் உடன் ஹாரி ப்ரூக் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிலைத்து நின்று விளையாடியது. இருவரும் அரைசதம் கடந்தனர்.

**211 ரன்கள் குவிப்பு...**



இங்கிலாந்து அணி 45 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 211 ரன்கள் எடுத்திருக்கும்போது, வெளிச்சமின்மை காரணமாக முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தது. ஜோ ரூட் 72 ரன்களுடனும், ஹாரி ப்ரூக் 78 ரன்களுடனும் களத்தில் உள்ளனர். ஆஸ்திரேலியா அணி சார்பில் ஸ்டார்க், நேசர், போலண்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

## சிட்னி திடலில் மரியாதை

முன்னதாக இந்த போட்டி துவங்கும் முன்பு, ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள புகழ்பெற்ற போண்டி கடற்கரையில், யூதர்களின் ஹனுக்கா பண்டிகை கொண்டாட்டங்களுக்காக கடந்த டிச.14ஆம் தேதி ஏராளமானோர் கூடியிருந்தனர். அப்போது 2 பயங்கரவாதிகள் நடத்திய மோசமான துப்பாக்கிச் சூடு தாக்குதலில், பயங்கரவாதிகளில் ஒருவர் உள்பட மொத்தம் 16 பேர் உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டு மீண்டவர்கள், காவல்துறையினர், செவிலியர்கள் வரவழைக்கப்பட்டு சிட்னி திடலில் மரியாதை செலுத்தப்பட்டது.

# வங்கதேச வீரர்களையும் ஐ.பி.எல். விளையாட அனுமதிக்கக்கூடாது

## பா.ஜ.க. தலைவர் வலியுறுத்தல்

**கொல்கத்தா, ஜன. 05-**

வங்கதேசத்தில் நடைபெற்றுகொண்டிருப்பது யாருக்கும் நல்லது அல்ல. இந்திய அரசாங்கம் தனது கடமையைச் செய்து வரும் நிலையில், வங்கதேசத்தில் இந்துக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களால் மேற்கு வங்க மக்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். இது மனிதாபிமானமற்ற செயல். இதற்குப் பின்விளைவுகள் இருக்கும்.

வங்கதேசத்தில் முன்கூட்டியே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். ஒரு நிலையான அரசாங்கம் அமைய வேண்டும். மேலும் சட்டம் ஒழுங்கு மீட்டெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் உயிர்களும் உடைமைகளும் பாதுகாக்கப்படும். எல்லைப் பதட்டங்களும் குறையும். நான் பிசிசிஐ-க்கு நன்றி தெரிவிக்கிறேன். பாகிஸ்தான் வீரர்கள் இந்தியாவில் விளையாட அனுமதிக்கப்படாதது போலவே, வங்கதேச கிரிக்கெட் வீரர்களும் அனுமதிக்கப்படக் கூடாது. இந்தக் கோரிக்கை கொல்கத்தாவில் இருந்து வந்தது, அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு திலிப் கோஷ் தெரிவித்துள்ளார்.

### மகிழ்ச்சி பொங்கும் தைப் பொங்கல்:

# பொங்கல் பரிசுத்தொகை அறிவிப்பு குறித்து முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி

**சென்னை, ஜன. 05-**

ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்கும் தைப் பொங்கல் என்று பொங்கல் பரிசுத் தொகை அறிவிப்பு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

இதுகுறித்து மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:- ஒவ்வொரு இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்கும் தைப் பொங்கல். உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இல்லத்தில் கொண்டாட்டமாக நிறைய, தமிழ்நாட்டிலுள்ள 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத்தொகுப்புடன் ரூ.3000 வழங்குகிறது நமது திராவிட அரசு. பொங்கலோ பொங்கல். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## மிட்செல் ஸ்டார்க் அபாரம்



ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் 300 சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். கடைசி ஆஷஸ் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து முதல் நாள் ஆட்ட நேர முடிவில் 211/3 ரன்கள் எடுத்தது. தேநீர் இடைவேளைக்கு முன்பாக மழை பெய்ய தொடங்கியதால் ஆட்டம் நிறுத்தப்பட்டு, பின்னர் முதல்நாள் முடிவடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டியில் சிறப்பாக பந்துவீசிய மிட்செல் ஸ்டார்க் பென் டக்கெட் விக்கெட்டை வீழ்த்தினார். இவரது ஓவரில் கேட்ச் தவறவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தமாக 300 (105 டெஸ்ட் + 130 ஒருநாள் + 65 டி20) போட்டிகளில் விளையாடியுள்ள மிட்செல் ஸ்டார்க் 755 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். இவ்வளவு போட்டிகள் விளையாடியும் 140கி.மீ/மணி வேகத்தில் பந்துவீசுகிறார். ஆஷஸ் தொடரில் ஒரு போட்டியிலும் நிற்காமல் விளையாடிவரும் இவரை ஆஸி. பயிற்சியாளர், "அவர் ஒரு வெறித்தனமான வீரர்" எனக் குறிப்பிட்டார். உலக அளவில் அதிக டெஸ்ட் விக்கெட் எடுத்த இடது கை வேகப் பந்துவீச்சாளர் பட்டியலில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

## சச்சின் சாதனைக்கு அருகில் ரூட்



சிட்னி டெஸ்ட்டில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் அரை சதம் அடித்து சிறப்பாக விளையாடி வருகிறார். இந்த அரை சதத்துடன் ஜோ ரூட் சச்சின் சாதனைக்கு மிக அருகில் சென்றுள்ளார். அடுத்த போட்டியில் சமன்செய்ய வாய்ப்பு இருக்கிறது. கடைசி ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட்டில் முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 211/3 ரன்கள் எடுத்துள்ளது. இந்தப் போட்டியில் ஜோ ரூட் 72 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்கிறார்.

இது ஜோ ரூட்டின் 67-ஆவது அரைசதமாகும். சச்சின் டெண்டுல்கர் 68 அரைசதத்துடன் முதலிடத்தில் இருக்கிறார். டெஸ்ட்டில் அதிக அரைசதங்கள் எடுத்தவர்கள் வருமாறு., 1. சச்சின் டெண்டுல்கர் - 68,2. ஜோ ரூட் - 67, 3. ஷிவ்நரைன் சந்திரபால் - 66, 4. ராகுல் திராவிட்/ ஆலன் பார்டர் - 63, 5. ரிக்கி பாண்டிங் - 62.

## துப்பாக்கி சுடுதல்: தமிழகத்துக்கு தங்கம்




தேசிய துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் ராணுவத்தின் அஜய் குமார், கர்நாடகத்தின் ஜோனத்தான் கெவின் 3 தங்கம் வென்றனர். புது தில்லியில் தேசிய துப்பாக்கி சுடும் போட்டி நடைபெற்று வருகிறது. ஆடவர் 10 மீ ஏர் பிஸ்டல் பிரிவில் ராணுவத்தின் அஜய் குமார் 241.1 புள்ளிகளுடன் தங்கமும், ரயில்வேயின் ஷுபம் பிஸ்லா வெள்ளியும், ஹரியாணாவின் அன்மோல் ஜெயின் வெண்கலமும் வென்றனர். கர்நாடக வீரர் ஜோனத்தான் கெவின் சப் யூத், யூத், ஜூனியர் பிரிவுகளில் மூன்று தங்கம் வென்றார். யூத் பிரிவில் ஜோனத்தான் 240 புள்ளிகளுடன் தங்கமும், பஞ்சாபின் குண்டத்பிரீத் சிங் வெள்ளியும், உ.பியின் சவேஜ் கான் வெண்கலமும் வென்றனர்.

சீனியர் கலப்பு டிராப் பிரிவில் தமிழகம் 36-35 என்ற புள்ளிக் கணக்கில் மத்திய பிரதேசத்தை வீழ்த்தி தங்கம் வென்றது. ஜூனியர் டிராப் கலப்பு அணிகள் பிரிவிலும் தமிழகம் 39-35 என ஹரியாணாவை வீழ்த்தி தங்கம் வென்றது. யுகன், தனிஸ்கா செந்தில்குமார் சிறப்பாக செயல்பட்டு வெற்றியைத் தேடித் தந்தனர்.

## வங்கதேச ஆலோசகர் சர்ச்சை பேச்சு

ஐ.பி.எல். தொடரில் நீக்கப்பட்ட முஷ்தஃபிசூர் ரஹ்மானுக்கு ஆதரவாக அந்த நாட்டின் சட்ட ஆலோசகரும் எழுத்தாளருமான ஆசிஃப் நஸ்ருல், அடிமைத்தனத்துக்கான காலம் முடிந்துவிட்டது எனக் கூறியது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. வங்காளதேசத்தில் இந்து மக்களின் மீது வன்முறை ஏற்படுவதால், முஸ்தஃபிசூர் ரஹ்மானை நீக்க இந்து அமைப்புகள் கோரிக்கை வைத்த நிலையில், பி.சி.சி.ஐ. அவரை நீக்கும்படி கே.கே.ஆர். அணிக்கு உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து முஷ்தஃபிசூர் ரஹ்மானை கே.கே.ஆர். அணி நீக்கியது. ஆசிஃப் நஸ்ருல் ஒரு வங்கதேச எழுத்தாளர், நாவலாசிரியர், கட்டுரையாளர், அரசியல் விமர்சகர் மற்றும் டாக்கா பல்கலைக்கழகத்தில் சட்டப் பேராசிரியர் என பன்முகத் தன்மைக் கொண்டவராக இருக்கிறார்.

இவர் வங்கதேசத்தின் விளையாட்டுதுறைக்கான ஆலோசகராகவும் பொறுப்பேற்று வருகிறார். இவர் தனது முகநூல் பக்கத்தில் கூறியதாவது:- தீவிர மத அமைப்புகளுக்கு தலைசாய்க்கும் வகையில், வங்கதேசத்தின் கிரிக்கெட் வீரர் முஷ்தஃபிசூர் ரஹ்மானை இந்திய கிரிக்கெட் சங்கம் கே.கே.ஆர். அணியிலிருந்து நீக்கியுள்ளத்துக்கு எனது கடுமையான கண்டனத்தையும் போராட்டத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு வங்கதேச வீரருக்கு பாதுகாப்பு இல்லையெனில் ஒட்டுமொத்த அணிக்கும் டி-20 உலகக் கோப்பையில் எப்படி பாதுகாப்பு இருக்கும் அடிமைத்தனத்துக்கான காலம் முடிந்துவிட்டது. எந்த சூழ்நிலையிலும் வங்கதேச கிரிக்கெட்டர், வீரர்கள் அல்லது வங்கதேசமும் அவமானத்தை ஏற்க விடமாட்டோம். அடிமைத்தனத்துக்கான காலம் முடிந்துவிட்டது எனக் கூறியுள்ளார்.

# மறைந்த எல்.கணேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி



**சென்னை, ஜன. 05-**

மறைந்த எல்.கணேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

மொழிப்போர் தளபதி என்றழைக்கப்பட்ட தி.மு.க. உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர் எல். கணேசன் காலமானார். அவருக்கு வயது 92. வயது மூப்பால் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் இன்று காலமானார். 1965-ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் முதன்மைத் தளபதியாக வழிநடத்திய எல்.கணேசன் மிசா சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டவர்.

மொழிப்போரில் ஈடுபட்டு மிசா சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட எல்.கணேசன் 3 முறை எம்.எல்.ஏ.வாகவும், இரு முறை எம்.பி.யாகவும் இருந்துள்ளார். எல்.கணேசன் உடல் தஞ்சாவூர் கண்ணந்தங்குடி கீழையூரில் அடக்கம் செய்யப்பட உள்ளது. இந்நிலையில், மறைந்த தி.மு.க. மூத்த நிர்வாகி மொழிப்போர் தியாகி எல்.கணேசன் உடலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் அஞ்சலி செலுத்தினார். மேலும், துக்கத்தில் இருந்த அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆறுதல் கூறினார்.

### 2036-ம் ஆண்டு ஒலிம்பிக்கை நடத்த

# இந்தியா முழு பலத்துடன் தயாராகி வருகிறது: பிரதமர்



**லக்னோ, ஜன. 05-**

2036-ம் ஆண்டு ஒலிம்பிக்கை நடத்த இந்தியா முழு பலத்துடன் தயாராகி வருவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

72-வது தேசிய கைப்பந்து சாம்பியன்ஷிப் தொடர் உத்தர பிரதேச மாநிலம் வாரணாசியில் நேற்று தொடங்கியது. பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் இதில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:- இந்தியாவில் கடந்த 10 வருடங்களில் பல்வேறு நகரங்களில் 20-க்கும் மேற்பட்ட முக்கிய சர்வதேச போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 17 வயதிற்கு உட்பட்டோருக்கான பிஃபா உலக கோப்பை, உலக கோப்பை ஹாக்கி, முக்கிய செஸ் போட்டிகள் அடங்கும். 2030 காமன்வெல்த் போட்டி இந்தியாவில் நடைபெற இருக்கிறது. 2036 ஒலிம்பிக்கை நடத்த இந்தியா முழு பலத்துடன் தயாராகி வருகிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

வருஞ் ஜனவரி 11-ம் தேதி வரை இந்தத் தொடர் நடைபெற இருக்கிறது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொள்கிறார்கள். 58 அணிகள் விளையாடுகின்றனர்

# முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக மாறுகிறது தமிழ்நாடு

## மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருப்பு

**சென்னை, ஜன. 05-**

தமிழ்நாடு முழுமையாக எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிப்பதற்காகன மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது.

ஒரு மனிதனின் வாழ்க்கைத் தரத்தை மாற்றும் ஒரு சக்திவாய்ந்த கருவி, எழுத்தறிவு. மத்திய அரசு கடந்த 2022-ம் ஆண்டு முதல் புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஒவ்வொரு மாநிலமும் 100 சதவீதம் எழுத்தறிவு பெறும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டாலும், 95 சதவீதத்தை தாண்டினாலே அது முழுமையாக எழுத்தறிவு பெற்ற மாநிலமாக கருதப்படுகிறது. ஏனென்றால், மிகவும் வயதானவர்கள், தன்னிச்சையாக செயல்பட முடியாதவர்களால் எழுத்தறிவை பெற முடியாது என்பதால் அந்த முடிவு எடுக்கப்பட்டது. இதனை 2027-ம் ஆண்டுக்குள் அனைத்து மாநிலங்களும் எட்டிவிட வேண்டும் என்ற முயற்சியில் மத்திய அரசு திட்டங்களை வகுக்கிறது.

இந்த எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் அடிப்படை எழுத்தறிவும், நிதிசார் கல்வி, டிஜிட்டல் கல்வி மற்றும் முக்கியமான வாழ்க்கைத் திறன் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு ஆண்டும் தேர்வும் நடத்தப்படுகிறது. அதில் வெற்றி பெறுபவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாக கருதப்படுவார்கள்.

மத்திய அரசு 2027-ல் இலக்கை நிர்ணயித்தாலும், தமிழ்நாட்டை பொறுத்தவரையில் இந்த நிலையை கடந்த ஆண்டிலேயே (2025) அடைந்துவிட்டோம். ஆனாலும் மத்திய அரசின் கல்வி அமைச்சகம் முறையாக இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். அந்த ஒப்புதலுக்காகவும், அந்த ஒப்புதல் அளித்ததும், அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிடுவதற்காகவும் தமிழ்நாடு அரசு ஆவலோடு காத்திருக்கிறது.

95 சதவீதத்தை தாண்டுவது மட்டுமல்லாமல், முடிந்த வரை 100 சதவீதத்தை எப்படியாவது நெருங்க வேண்டும் என்ற முனைப்பில் தமிழ்நாடு அரசும் எழுத்தறிவு பயிற்சி வழங்கி, அதன் மூலம் தேர்வை நடத்தி வருகிறது. 2025-ம் ஆண்டில் ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் தேர்வு நடந்தது. ஜூனில் நடந்த தேர்வை 5 லட்சத்து 38 ஆயிரத்து 29 பேரும், டிசம்பரில் நடந்த தேர்வை 9 லட்சத்து 63 ஆயிரத்து 169 பேரும் என மொத்தம் 15 லட்சத்து ஆயிரத்து 38 பேர் எழுதியுள்ளனர். இதன் தேர்ச்சியும், முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலம் என்ற அறிவிப்பும் ஒருசேர வரும் சூழல் இருக்கிறது.

அப்படி அறிவிப்பு வந்தால், முழுமையாக எழுத்தறிவு பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழ்நாடும் இடம் பெறும். இதற்கு முன்பு மிசோரம், கோவா, திரிபுரா, இமாசல பிரதேசம், லடாக் ஆகிய மாநில, யூனியன் பிரதேசங்கள் இருக்கின்றன.

இவைகள் எல்லாவற்றிலும் மக்கள் தொகை என்பது மிகவும் குறைவு. இந்த மாநிலங்களின் மக்கள் தொகையைவிட பல மடங்கு அதிகம் கொண்டவையாக தமிழ்நாடு உள்ளது. அந்த வகையில் பெரிய மாநிலங்களில் முழுமையான எழுத்தறிவு பெற்ற மாநிலமாக 'தமிழ்நாடு' பெயர் பெறப்போகிறது. கேரளாவை பொறுத்தவரையில், 1991-ம் ஆண்டிலேயே யுனெஸ்கோ அமைப்பால் முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### 5 மணி நேரம் காத்திருந்து

# திருச்செந்தூர் கோவிலில் பக்தர்கள் சுவாமி தரிசனம்

**திருச்செந்தூர், ஜன. 05-**

திருச்செந்தூர் கோவிலில் பக்தர்கள் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்

அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்து வருகின்றனர். தற்போது பள்ளிகளுக்கு அரையாண்டு தேர்வு விடுமுறையை முன்னிட்டு கடந்த 10 நாட்களுக்கு மேலாக பல லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

நேற்று கோவில் நடை அதிகாலை 3 மணிக்கு திறக்கப்பட்டது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் வழக்கம் போல் நடைபெற்றன. நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருச்செந்தூரில் குவிந்தனர். மேலும் பாத யாத்திரை, ஐயப்ப பக்தர்களும் ஏராளமானோர் குவிந்தனர். அதிகாலையில் கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி ரூ. 100 கட்டண தரிசன வரிசை மற்றும் பொது தரிசன வரிசையில் சுமார் 5 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 05.01.2026 முதல் 11.01.2026 வரை )**

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் பொருளாதார நிலை சீராகி மகிழ்ச்சி ஏற்பட்டாலும், தேவையற்ற செலவுகள் ஏற்படும் வழக்குகளில் நிச்சயம் வெற்றி கிடைக்கும். விஐபி களின் நட்பின் மூலம் ஆதாயங்கள் பெறும் நிலை உருவாகும். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் வெற்றியின் மகிழ்ச்சி அனுபவிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் மகிழ்ச்சி பொங்கும்.. மாணவர்கள் தங்கள் பொன்னான நேரத்தை முகநூல் மற்றும் இணையதளங்களைப் பார்ப்பதில் வீணடிக்காமல், கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். பிறருக்கு நல்லது செய்வதன் காரணமாக உங்கள் கீர்த்தி பெருகும். புனித காரியங்களில் ஈடுபாடு ஏற்படும்.

பரணி --

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். தாராளமான தனவரவு இருக்கும். உற்றார் உறவினரின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். காதல் மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். நல்லவர்களுடன் ஏற்படும் தொடர்புகள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல், செலவுகளும் கூடும். மனக்கவலைகள் மனைவியின் அரவணைப்பால் குறையும். குழந்தைகளின் விளையாட்டுகளை கண்டு உங்கள் முகத்தில் புன்னகையும், மகிழ்ச்சியும் ஏற்படும். வியாபார விரிவாக்கத்தால் கிடைக்கும் இலாபம் சிறப்பானதாக இருக்கும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். அரசு மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து தொழிலில் நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமை மிக்க செயல்களால் பாராட்டப்படுவீர்கள். வாழ்க்கையில் மனைவி நல்ல முன்னேற்றத்துக்கான ஆலோசனைகளைத் தருவார். வியாபார விஷயமாக வெளியூர் பயணங்கள் லாபகரமாக அமையும். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். திடீர்ப் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, தங்கள் பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்துக்கு நல்லது. அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்குப் புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு ஆதாயம் கிட்டும். மாணவர்களுக்குத் தேர்வு முடிவுகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். ஓய்வெடுத்து, உல்லாசமாய்ப் பொழுது போக்கும் விதமாக, நமக்கு எல்லா நாட்களும் விடுமுறை நாட்களாக இருப்பதில்லை. அதேபோல் இன்பமும் துன்பமும் கலந்தது தானே வாழ்க்கை. எனவே, கஷ்டங்கள் வந்தாலும் கலங்காதீர்கள்.

ரோகிணி –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை வேறு புதிய முதலீடுகளில் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சியும் பொங்கும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீடு, கடை வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற மிகுந்த அக்கறையுடன் படித்தல் அவசியம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தன வரவும் உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

திருவாதிரை —

இந்த வாரம் புண்ணியத் திருத்தலம் யாத்திரைகள் செல்வதால் தெய்வீக அருள் கிடைத்து, மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் , விருப்பங்கள் நிறைவேறுவதால் குதூகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் கிடைத்து புதிய விரிவாக்கத் திட்டங்கள் இலாபத்தைப் பெருக்குவர்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் பொருள் வரவு எதிர்பார்ப்புக்கு மேல் இருக்கும். நல்ல பண்புள்ள நண்பர்கள் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிட்டு, வேண்டுதல்களை நிறைவேற்றும் நிலை ஏற்படும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்ப்பு படி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். எதிரிகள் கை ஓங்கும் ஆதலால், எதற்கும், அவர்களிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. அரசு அலுவலகத்தில் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி உண்டாகும். செலவுகளைக் குறைத்து பணத்தை சேமிப்பது , பிற்காலத்தில் உதவும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டிய நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்படும், அதில் வரும் இலாபத்தால் வீட்டில் வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

பூசம் –

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாதிருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. ஒளிமயமான எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகளின் வருகையால் ஆனந்தம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். பொதுஜன தொடர்புகள் மூலம் புகழ் ஓங்கும். நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் தாயின் அரவணைப்பே ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தேவையற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்கு பிறருக்குக் கட்டளையிடும் படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வியில் நல்ல முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். அவர்களால் பெற்றோர்களுக்கு பெருமை சேரும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. கனிவான கைகொடுக்கும், புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைக்க கடன் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். அன்பாகத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

பூரம் –

இந்த வாரம் நண்பர்களும் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. எடுத்த காரியங்கள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவை. புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவினால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்பட்டது அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். கௌரவம், அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தும் மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். பிறர் பாராட்டும்படியான மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் ஏறபடும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாகச் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். ஞானிகள் மற்றும் பெரியோர்களின் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். பக்கத்து வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத் தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசு பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர்.

அஸ்தம் –

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எப்போதும், எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறுசிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையிலும் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்திகள் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உங்கள் கடின உழைப்பால் சம்பாத்தியம் கூடும். உங்கள் செயல்திறன் கூடும் மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பெண்களுக்கு பணியிடத்தில் மற்றவர்களின் பூரண ஒத்துழைப்புக் கிடைக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மாணவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். அரசு பணி புரிபவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

சுவாதி –

இந்த வாரம் சிலருக்குப் பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். அதன் காரணமாக செலவுகள் அதிகரிக்கும். வேலை விஷயமாக தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். கோபத்தைத் தவிர்த்து வீண் மனஸ்தாபங்கள் தவிர்க்கலாம். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரும். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சில நேரங்களில் சுறுசுறுப்பான நிலையும், மனோபயம் நிலவும். புதிய தொடர்புகள் மூலம் நன்மைகள் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை சுலபமாக அடைவீர்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் நீங்கள் முக்கிய விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சியுடன் பொழுதை கழிப்பீர்கள். எல்லா வகையிலும் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றியை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். மாணவர்கள் அக்கறையுடன் படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறமுடியும். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

அனுஷம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகள் மூலம் இல்லமே விழாக்கோலம் காணும். திடீரென ஏற்படும். வியாபார சம்பந்தமான பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டும் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் பணியில் இட மாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும்.

கேட்டை –

இந்த வாரம் அனைத்து காரியங்களிலும் மனைவியின் உதவிகள் கிடைத்து மனமகிழ்ச்சி ஏற்படும். வாக்கால் வருமானம் பெருகும். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத தன வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெறும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் அன்பும், நட்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் உங்களுக்கு நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தானதர்மங்கள் செய்வார்கள்.

பூராடம் –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். வேலையில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தீவிர முயற்சிக்குப் பின், இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் எதிர்பாராத விதமாக பல வழிகளிலும், தனவரவுகள் வந்து சேரும். வந்த பணத்தை வீண் செலவுகளை செய்யாமல் செமிப்பது பிற்காலத்திற்கு உதவிகரமாக இருக்கும். வேலைகளில் சுறுசுறுப்பைக் கூட்டிச் சிறப்பாகப் பணிபுரிந்து அதிகாரிகள் பாராட்டு பெறுவீர்கள். மனதில் மற்றவர்களுக்கு உதவும் நல்லெண்ணம் அதிகரிக்கும். வியாபார சம்பந்தமான பயணங்களால் எதிர்பார்ப்புக்கு மேல் அதிக இலாபம் கிடைக்கும். பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டு தான தருமங்கள் செய்து மகிழ்வார்கள். சிலருக்கு தீவிர முயற்சிக்குப் பின் அரசு அல்லது அரசியல்வாதிகளின் சிபாரிசால் புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்களுக்கு வங்கிக் கடன்கள் கிடைத்து முன்னேற்றம் ஏற்படும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் நீங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் யாவும் அரசு உதவியால் அனுகூலமாக முடியும். தொடர் முயற்சி காரணமாக, வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமின்றி உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். பண விஷயங்களில் யாரை நம்பியும் ஏமாறாமல், மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம்.

திருவோணம்-

இந்த வாரம் உங்களுக்கு தெய்வீக சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். சிறப்பான உடை, சிங்காரமான ஆபரணங்கள் ஆகியவை கிடைக்கும். எதிர்பார்த்தபடி தனவரவு ஏற்படும். பொருளாதார நிலை சீராகும். திறமை அதிகரித்து கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும். மாணவர்களின் கவனச் சிதறல்கள் காரணமாக படிப்பில் ஆர்வம் குறையும். எனவே, ஆசிரியர்கள் ஆலோசனைப்படி ஆழ்ந்து படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் பயணத்தில் துன்பமும் ஏற்படும். கடன் கொடுத்தவர்கள் கெடுபிடி செய்வார். அரசு வகைத் தொல்லைகள் ஏற்படும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு நல்ல ஆசிரியர் வாய்க்கப் பெற்று அனைத்து வழிகளிலும் அறிவுத் தெளிவு ஏற்படும். சிலருக்குத் திருமண ஏற்பாடுகள் நடைபெறும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைத்துப் புகழும் ஓங்கும்.. வாக்கு வன்மை ஓங்கி, அதன் மூலம். ஆதாயம் அடைவீர்கள். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் உங்களுக்குப் பணிச்சுமை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். மது, மாமிசம் அருந்துபவர்களுக்கு அஜீரண தொல்லைகள் எழலாம். உறவினர் வருகையால் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். தொலை தூரச் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். வாழ்க்கையில் நற்பலன்களை எதிர்பார்க்கலாம் இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். பதவி உயர்வும் எதிர்பார்க்கலாம். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும்.

சதயம்-

இந்த வாரம் நீங்கள் அரசுத் துறைகளின் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். சில நல்ல காரியங்களில், சிலருக்குத் தடை, தாமதங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது. இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உட்கொள்ளும் நேரம் இருக்காது. விருந்தினர் வருகையால் வீட்டில் சந்தோஷம் பெருகும். சினிமா, மால்களில் பொழுது போக்குதல் எனச் செலவுக்கும் குறைவிருக்காது. தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். அரசு வகையில் கட்ட வேண்டிய வரிகள் செலுத்துவதற்கு தேவையான பணவுதவி கள் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் எப்போதும் பணம் விஷயம் சிந்தனையுடன் இருப்பார்கள். கோபத்தை அடக்கிக் குடும்பத்துடன் ஒத்துப் போவது நல்லது.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும். சிலருக்குப் பணமுடைகள் ஏற்படலாம். உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி ஆதாயங்கள் இருக்கும். வாக்குவன்மையால் பொருளாதார உயர்வில் முன்னேற்றம் ஏற்படும். பூஜை வழிபாடுகள் மூலம் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். பயணத்தின் போது மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அரசு அதிகாரிகளால் சிலருக்கு நன்மைகள் ஏற்படலாம். காரியத்தடைகள், வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவம் உண்டாகும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் வீட்டில் சுப நிகழ்ச்சிகள் களைகட்டும். அதன் காரணமாக சந்தோஷம் பொங்கும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. போட்டி தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும் பெண்களால் இலாபம் ஏற்படும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் உங்களுக்கு எதிர்பார்ப்புக்கு மேல் தாராளமான பணவரவு அதிகரித்து மனமகிழ்ச்சி கூடும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும், பெரிய மனிதர்களின் சந்திப்பும் ஏற்படும். சிலருக்கு வியாபாரப் போட்டிகள் காரணமாக வீண் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். விற்பனைப் பிரதிநிதிகள் தங்கள் தனித் திறமைகள் மூலம் புதிய இலக்குகளை எட்டி அதிக இன்சென்டிவ், பாராட்டு பெறுவர். பணிபுரியும் நண்பர்களுக்கு மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். சாதுக்களின் தரிசனம் மற்றும் புண்ணிய கதைகள் கேட்டல் என பொழுது பக்திமயமாகக் கழியும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும்.

ரேவதி-

இந்த வாரம் ஆரம்பத்தில் வீண் செலவுகள் அதிகரிக்கும். பின்வரும் நாட்களில் புதிய முயற்சிகள், தனவரவு அதிகரிப்பதாலும், கேளிக்கைகளில் ஈடுபடுதல், இனிய பயணங்கள் என எல்லாம் நன்மையாகவே நடக்கும். வியாபாரிகளுக்கு நற்செய்திகள் வரும். விற்பனைத் திறமைகளைக் காட்டி தங்கள் இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். அதிகாரிகள் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். புதிய பெண்களின் நட்பு மனக்களிப்பு தரும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். புதிய சாதனைகள் புரிந்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவார்கள். பெண்களுடன் வாக்குவாதங்களை தவிர்க்கவும். சிலருக்கு மன சஞ்சலங்கள் மற்றும், அலைச்சல்களும் ஏற்படலாம்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற, மறைந்த திரைப்பட தயாரிப்பாளர் எம்.சரவணன் படத்திறப்பு மற்றும் புகழ் வணக்கம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அவரது திருவுருவப் படத்தை திறந்துவைத்து, மலர்கொத்து வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், என்.ராம், ரஜினிகாந்த், கமல்ஹாசன் எம்.பி., கவிஞர் வைரமுத்து, நல்லி குப்புசாமி, இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், வி.சி.குகநாதன், ஏ.வி.எம். குடும்பத்தைச் சார்ந்த எம்.பாலசுப்ரமணியம், எம்.எஸ்.குகன், அருணா குகன் ஆகியோர் உடனிருந்தனர்.

## ஏ.வி.எம். சரவணன் நினைவேந்தல் நிகழ்ச்சி:

# ஏ.வி.எம். நிறுவனத்தை குறிப்பிடாமல் தமிழ் சினிமா பற்றி பேசவே முடியாது

## முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்

சென்னை, ஜன. 05-

ஏ.வி.எம். சரவணன் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஏ.வி.எம். நிறுவனத்தை குறிப்பிடாமல் தமிழ் சினிமாவை பேசவே முடியாது என்றும், பராசக்தி வசனத்தை பேசி பள்ளியில் பரிசு பெற்றவர் ஏ.வி.எம். சரவணன் என்றும், கருணாநிதிக்கும் ஏ.வி.எம். நிறுவனத்துக்கும் நெருங்கிய நட்பு உண்டு என்றும் அவர் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

ஏ.வி.எம். நிறுவனத்தின் உரிமையாளரும், பழம்பெரும் திரைப்படத் தயாரிப்பாளருமான ஏ.வி.எம்.சரவணன் கடந்த டிசம்பர் 4-ந்தேதி காலமானார். தமிழ்நாடு அரசின் கலைமாமணி, புதுச்சேரி அரசின் சிகரம் விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

இந்நிலையில், ஏ.வி.எம்.சரவணன் நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னையில் நேற்று நடைபெற்றது. சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள ஏ.வி.எம். மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, மறைந்த ஏ.வி.எம்.சரவணன் உருவப்படத்தை திறந்து வைத்தார். படத்திறப்பு நிகழ்வில் நடிகர்கள் ரஜினிகாந்த், கமல்ஹாசன், கவிஞர் வைரமுத்து உள்ளிட்டோர் கலந்து கொண்டு, ஏ.வி.எம்.சரவணன் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது; "ஏ.வி.எம். நிறுவனத்தை குறிப்பிடாமல் தமிழ் சினிமாவை பற்றி பேசவே முடியாது. பராசக்தி வசனத்தை பேசி பள்ளியில் பரிசு பெற்றவர் ஏ.வி.எம். சரவணன். ஏ.வி.எம். நிறுவன பொன் விழாவில் 190 கேடயங்களை மேடையில் நின்று கொண்டே கருணாநிதி வழங்கினார். கருணாநிதிக்கும் ஏ.வி.எம். நிறுவனத்துக்கும் நெருங்கிய நட்பு உண்டு.

நான் மேயராக இருந்த போது பள்ளி மாணவர்களை விமானத்தில் திருப்பதி அழைத்து செல்ல ஏ.வி.எம். சரவணன் காரணமாக இருந்தார். என்னதான் சட்டம் போட்டாலும் திருட்டு விசிடியை கட்டுப்படுத்த முடியாது என்று ஏ.வி.எம். சரவணன் கூறினார். கூத்து அழிந்து நாடகம் பிறந்தது, நாடகம் அழிந்து சினிமா பிறந்தது; அதேபோல, காலத்திற்கு ஏற்ப கலை வடிவம் மாறும் என்று கூறியவர் ஏ.வி.எம். சரவணன்" இவ்வாறு மு.க. ஸ்டாலின் பேசினார்.

முன்னதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருபதாவது;- சிகரங்களைத் தொட்டபோதும் எளிமையே தன் அடையாளம் என வாழ்ந்த 'உயர்ந்த உள்ளம்' ஏ.வி.எம். சரவணன். உடையால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் தூய்மையானவராக வாழ்ந்து காட்டிய சாதனையாளர்தான் ஏ.வி.என் சரவணன். தந்தை சம்பாதித்த பெயரைக் காப்பாற்றிய மகனாக, அனைத்துத் தரப்பினரின் நம்பிக்கையைப் பெற்ற தயாரிப்பாளராகத் தமிழ்த் திரையுலகிற்கு அவர் ஆற்றிய பங்களிப்புகள் என்றும் போற்றுதலுடன் நினைவுகூரப்படும். எங்கள் குடும்ப நண்பராக மாசற்ற அன்பு பாராட்டிய ஏ.வி.எம். சரவணனுக்கு என் புகழஞ்சலி. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகன் படத்துக்கு எதிராக தமிழ்நாடு அரசு நடவடிக்கையா?

## அமைச்சர் முத்துசாமி விளக்கம்

கோபி, ஜன. 05-

ஜனநாயகன், பராசக்தி போன்ற படங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் தி.மு.க. அரசு ஈடுபட வேண்டிய தேவை இல்லை என்று முத்துசாமி கூறினார்.

ஈரோடு மாவட்டம் கோபியில் அமைச்சர் முத்துசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறும்போது, 'ஜனநாயகன், பராசக்தி போன்ற படங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையிலும் தி.மு.க. அரசு ஈடுபட வேண்டிய தேவை இல்லை. வேண்டுமென்றே தொல்லை தரும் அரசு இது அல்ல. அது உலகத்துக்கு தெரியும்' என்றார்.அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும் அதற்கு அமைச்சர் முத்துசாமி அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி: தைப்பொங்கலுக்கு பொதுமக்களுக்கு ரூ.5 ஆயிரம் வழங்கவேண்டும் என்று பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளாரே?

பதில்: கொரோனா காலத்தில் மக்கள் அனைவரும் வீடுகளில் இருந்தபோது ரூ.5 ஆயிரம் வழங்கவேண்டும் என்று கேட்டோம். கொடுத்தார்களா? பொங்கலுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தெரியும்.

கேள்வி: தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவுக்கு தெருக்கள் தோறும் மது விற்பதுதான் என்று அன்புமணி சொல்லியிருக்கிறாரே?

பதில்: அவர் எதையாவது சொல்லிக் கொண்டேதான் இருப்பார். அவர்களின் கட்சிக்குள் இருக்கிற பிரச்சினைகளை முடிப்பதே அவருக்கு மகிழ்ச்சியான விஷயம். சட்டம் ஒழுங்கு சீர்குலையவில்லை. இவ்வாறு அவர் கூறினார்.



தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஜி.டி.நாயுடுவின் ஆவணங்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு, 'தமிழ்நாட்டு அறிவியலாளர் ஜி.டி. நாயுடு' என்னும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு இணையப் பக்கத்தை (https://tamildigitallibrary.in/gdn), தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் (பொறுப்பு) கோமகன், உதவி இயக்குநர் செல்வ புவியரசன், சித்தானை, திட்ட அலுவலர் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி சென்னை, எழும்பூர், கோ-ஆப்டெக்ஸ் தில்லையாடி வள்ளியம்மை விற்பனை நிலையத்தில் பராம்பரிய சேலையின் அழகையும், நவீன உடை வசதியையும் ஒருங்கிணைக்கும் வகையில் 'ரெடி டு வியர் சாரி' இரகத்தினை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வின் போது கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, அரசு செயலாளர் அமுதவல்லி, கைத்தறித் துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமி கவர்னர் மாளிகையில் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனை நேரில் சந்தித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு ரயில்களில் முன்பதிவு துவக்கம்

சென்னை, ஜன. 05-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலை தவிர்க்கவும் 34 சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்த சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு நேற்று காலை முதல் தொடங்கியது.

இதுகுறித்து, தெற்கு ரயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- நாகர்கோவிலில் இருந்து வருகிற 11,18 ஆகிய தேதிகளில் இரவு 11 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் சிறப்பு ரயில் (வண்டி எண்.06012), மறுநாள் காலை 10.15 மணிக்கு தாம்பரம் வந்தடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து வருகிற 12,19 ஆகிய தேதிகளில் மாலை 3.30 மணிக்கு புறப்பட்டு கன்னியாகுமரி செல்லும் சிறப்பு ரயில் (06011), மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும்.

கன்னியாகுமரியில் இருந்து வருகிற 13,20 ஆகிய தேதிகளில் இரவு 8.30 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் சிறப்பு ரயில் (06054), மறுநாள் காலை 10.15 மணிக்கு தாம்பரம் வந்தடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து வருகிற 14,21 ஆகிய தேதிகளில் மதியம் 12.30 மணிக்கு புறப்பட்டு நாகர்கோவில் செல்லும் சிறப்பு ரயில் (06053), மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு நாகர்கோவில் சென்றடையும்.

நெல்லையில் இருந்து வருகிற 9, 16 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு செங்கல்பட்டு வரும் சிறப்பு ரயில் (06156), அதேநாள் மதியம் 1.15 மணிக்கு செங்கல்பட்டு வந்தடையும். மறுமார்க்கமாக, செங்கல்பட்டில் இருந்து வருகிற 9,16 ஆகிய தேதிகளில் மாலை 3.30 மணிக்கு புறப்பட்டு நெல்லை செல்லும் சிறப்பு ரயில் (06155), மறுநாள் அதிகாலை 2 மணிக்கு நெல்லை சென்றடையும்.

நெல்லையில் இருந்து வருகிற 10,17 ஆகிய தேதிகளில் அதிகாலை 3.45 மணிக்கு புறப்பட்டு செங்கல்பட்டு வரும் சிறப்பு ரயில் (06158), அதேநாள் மதியம் 1.15 மணிக்கு செங்கல்பட்டு வந்தடையும். மறுமார்க்கமாக, செங்கல்பட்டில் இருந்து வருகிற 10,17 ஆகிய தேதிகளில் மாலை 5 மணிக்கு புறப்பட்டு நெல்லை செல்லும் சிறப்பு ரயில் (06157), மறுநாள் அதிகாலை 3 மணிக்கு நெல்லை சென்றடையும்.

கோவையில் இருந்து வருகிற 11,18 ஆகிய தேதிகளில் இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் சிறப்பு ரயில் (06034), மறுநாள் காலை 9.50 மணிக்கு சென்டிரல் வந்தடையும். மறுமார்க்கமாக, சென்டிரலில் இருந்து வருகிற 12,19 ஆகிய தேதிகளில் இரவு 11.25 மணிக்கு புறப்பட்டு கோவை செல்லும் சிறப்பு ரயில் (06033), மறுநாள் காலை 9 மணிக்கு கோவை சென்றடையும்.

போத்தனூரில் இருந்து வருகிற 14,21 ஆகிய தேதிகளில் நள்ளிரவு 12.35 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்டிரல் வரும் சிறப்பு ரயில் (06024), அதேநாள் காலை 10.30 மணிக்கு சென்டிரல் வந்தடையும். மறுமார்க்கமாக, சென்டிரலில் இருந்து வருகிற 14,21 ஆகிய தேதிகளில் மதியம் 1.50 மணிக்கு புறப்பட்டு போத்தனூர் செல்லும் சிறப்பு ரயில் (06023), அதேநாள் இரவு 11.15 மணிக்கு போத்தனூர் சென்றடையும்.

நெல்லையில் இருந்து வருகிற 8-ந்தேதி இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு எழும்பூர் வரும் சிறப்பு ரயில் (06070), மறுநாள் காலை 10.30 மணிக்கு எழும்பூர் வந்தடையும். மறுமார்க்கமாக, எழும்பூரில் இருந்து வருகிற 9-ந்தேதி மதியம் 12.30 மணிக்கு புறப்பட்டு நெல்லை செல்லும் சிறப்பு ரயில் (06069), அதே நாள் இரவு 11.30 மணிக்கு நெல்லை சென்றடையும்.

ராமேசுவரத்தில் இருந்து வருகிற 13,20 ஆகிய தேதிகளில் இரவு 8.15 மணிக்கு புறப்பட்டு தாம்பரம் வரும் சிறப்பு ரயில் (06106), மறுநாள் காலை 10.15 மணிக்கு தாம்பரம் வந்தடையும். மறுமார்க்கமாக, தாம்பரத்தில் இருந்து வருகிற 14,21 ஆகிய தேதிகளில் மதியம் 2 மணிக்கு புறப்பட்டு ராமேசுவரம் செல்லும் சிறப்பு ரயில் (06105), மறுநாள் அதிகாலை 3.30 மணிக்கு ராமேசுவரம் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மொத்தம் 34 சிறப்பு ரயில்களுக்கான முன்பதிவு நேற்று காலை 8 மணிக்கு தொடங்கி நடைபெற்றது. பயணிகள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் ரயில்வே துறை முன்பதிவு இணையதளம் மற்றும் நேரடியாக ரயில் நிலைய கவுண்ட்டர்களில் முன்பதிவு செய்துகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தைப் பொங்கலுக்கான சிறப்பு ரயில்களை தவிர்த்து வழக்கமான ரயில்களுக்கான முன்பதிவு கடந்த 2025 அக்டோபர் இறுதி வாரத்தில் தொடங்கிய சில மணி நேரங்களிலேயே முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# கடலோர தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை, ஜன. 05-

கடலோர தமிழகத்தில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் இன்று வறண்ட வானிலை நிலவக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.;

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- தெற்கு கேரள கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள், பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இன்று 05-01-2026 மற்றும் 06-01-2026: கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள் தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். வரும் 07-01-2026 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் குறைந்த பட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக குறையக்கூடும்.

வரும் 07-01-2026 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் 2-3 டிகிரி செல்சியஸ் இயல்பை விட குறைவாக இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்களில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனி மூட்டம் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அ.தி.மு.க. அம்மா பேரவையின் சார்பில் மதுரை புறநகர் மேற்கு மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் உள்ள பேரையூரில் நடைபெற்ற திண்ணை பிரசாரத்தை அ.தி.மு.க. அம்மா பேரவை செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணை தலைவருமான ஆர்.பி.உதயகுமார் துவக்கி வைத்து மேளதாளங்கள் முழங்க வீதி வீதியாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து துண்டு பிரசுரங்களை வழங்கினார். இதில் டி.கல்லுப்பட்டி ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.